15/2

உ

யாழ்ப்பாணம்-வண்ணார்பண்ணை

வடமேற்கு

# ஸ்ரீ பூரணாம்பா புட்கலாம்பா சமேத (ஹரிஹர புத்திரர்) ஐயனார் கோயில்

மஹா கும்பாபிஷேக

# சிறப்பு மலர்

★



# திருத்தல வரலாறு

★

மண்டலாபிஷேக
பூர்த்திவிழாவின்போது
வெளியிடப்பெற்றது.

1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை வடமேற்கு

ஸ்ரீ பூரணாம்பா புட்கலாம்பா சமேத

(ஹரிஹர புத்திரர்)

# ஐயனார் கோயில் திருத்தல வரலாறு

ஆசிரியர்:
பரராஜசிங்கம் கணேசலிங்கம்
கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

வெளியீடு:
ஹரிப்பிரியா பதிப்பகம்
உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு: படிகள் 500
குரோதன வருடம் ஐப்பசி மாதம் 24ந் திகதி (9-11-85)

பதிப்புரிமை: ஹரிப்பிரியா பதிப்பகம், உரும்பிராய்.

அச்சுப்பதிவு: சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 23002

# பொருளடக்கம்

ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
ஆசியுரை: சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள்
வாழ்த்துரை: பேராசிரியர் சு. வித்தியானந்தன்
வாழ்த்துரை: பிரம்மஸ்ரீ பி. பா. பஞ்சாட்சரக் குருக்கள்
வாழ்த்துரை: திரு. க. வை. நவரத்தினம்
அணிந்துரை: கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
முன்னுரை: திரு. ப. கணேசலிங்கம்
பதிப்புரை: திரு. இ. தவகோபால்

1. இறை வணக்கம்
2. வண்ணார்பண்ணை – ஊர்ச்சிறப்பு
3. கோயிற் சூழல்
4. கோயிற் சிறப்பும் மூர்த்தி விசேடமும்
5. ஐயனார் வழிபாடு
6. கோயில் வரலாறு
7. வைரவ மூர்த்தி
8. கோயிற் பரிபாலனமும் திருப்பணியும்
9. கோயில் வழிபாட்டு மரபும் கிரியைகளும்
10. கோயிற் குருக்கள் பரம்பரை
11. கோயிலும் சமூகமும்

அநுபந்தங்கள்
துணைநூற் பட்டியல்கள்
வரவு-செலவு அறிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர்
இரண்டாவது குருமகா சந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கிய

# ஆசியுரை

*சிவநேயச் செல்வர்களே,*

மோஹினி அவதாரத்தில் மஹாவிஷ்ணு ஸ்திரீ ரூபமாகவும் ஈஸ்வரன் புருஷ அம்சமாகவும் இருந்த போது சாஸ்தா-ஐயனார்என்ற பிள்ளை பிறந்ததாகப் புராணங்கள் பகரும். இதனாலேதான் ஹரிஹர புத்திரர் என்கிறோம். விஷ்ணு பரமாத்மா, புருஷ சக்தி காக்கும் தெய்வம், ஆக ஒருமையுடன் ஐயனாரின் திருவடிகளை வழிபடுவோர் திவ்ய கடாட்சம் பெற்றுய்வர். யாழ்ப்பாணத்தில் ஐயனார் கோயிலடி என்றால் இந்த ஒரு இடத்தையே குறிக்கும். இத்தால் இத்தலவிசேடம் அறியற்பாலது. இவ்வாலய வளர்ச்சியில் ஆசிரியர் திரு. ப. கணேசலிங்கம் அவர்கள் எடுக்கும் அயராத முயற்சிகளைப் பாராட்டுகிறோம். இவ்வரிய தொண்டுக்கு உறுதுணை நிற்கும் அன்பர்கள் அனைவருக்கும் எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.

"எம்கடன் பணிசெய்து கிடப்பதே"
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நல்லை ஆதீனம்
யாழ்ப்பாணம்.

உ

ஈழவளநாடு வீரசைவ குருமகா சந்நிதானம்
கீரிமலை ஸ்ரீ இரேணுகாச்சிரம மகாகுரு

## வண்ணை சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளைக் குருக்களவர்கள் வழங்கிய

# ஆசியுரை

வண்வடமேற்கு அருள்மிகு ஐயனார் ஆலயத் திருப்பணிகள் நிறைவு பெற்றுக் குடமுழுக்கு நடைபெறப்போகும் இப்பொன்னாளில் அவ்வாலயத்தைப்பற்றியும் குடமுழுக்குப் பற்றியும் சிறிது சிந்தித்தல் பொருத்தமானதென எண்ணுகிறோம்.

அரியும் கரரும் கூட அவதரித்தவர் அரிகர புத்திரர். இவருக்கு சூரியன், காரி, சாதவாகனன், சாத்தன் எனப் பல்வேறு நாமங்களுள இவருடைய தேவியர் பூரணை புட்கலையாவர்.

அருள்மிகு ஐயனார் ஆலயம் நிறுவப்பட்டிருக்கும் இடத்திற்கு ஆண்டிச்சீமா என்பது தொன்மைப் பெயர். இப்பெயர் மறக்கப்பட்டு "ஐயனார் கோயிலடி" என்ற பெயரே இப்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. கோவிலின் பெயரால் ஓரிடத்தின் பெயர் வழங்கப்படல் மிக அருமை. ஐயனார் ஆலயத்தின் பெயரால் அவர் எழுந்தருளியிருக்குமிடம் வழங்கப்பட்டுவருவது பெருமைக்குரிய விடயமாகும்.

சுமார் 200 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இவ் ஐயனார் ஆலயத்தில் வீரசைவக்குரு சிவத்திரு மயில்வாகனக் குருக்களின் சமாதி இருந்ததாக அறிகிறோம். இச்சிவாசாரியார் முன்னைய அர்ச்சகராகவும் பெரும் பக்திமானாகவும் இருக்கலாம். இதன்பின்னர் 1845ம் ஆண்டளவில் வீரசைவக்குரு சிவத்திரு ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்களால் அருள்மிகு ஐயனார் ஆலயத்திற்குக் குடமுழுக்கு நடைபெற்றதாக அறியக்கிடக்கிறது, இதனைத் தொடர்ந்து இவ்வாலய அர்ச்சகர்களாக வீரசைவ நெறியைச் சார்ந்த சிவத்திருவாளர்கள் சிதம்பரப்பிள்ளைக் குருக்கள், ஐயம்பிள்ளைக் குருக்கள் ஆகியோர் விளங்கி ஐயனாராலயத்தை மேநிலையடையச் செய்தனர்.

காலத்திற்குக் காலம் விசேட அபிடேகங்களும் ஆராதனைகளும் இவ்வாலயத்தில் நடைபெற்றதெனினும் இன்றுதான் முறைப்படி கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனருத்தாரணஞ் செய்யப்பெற்று குடமுழுக்கு மீண்டும் நடைபெறுகிறது.

இவ்வாலயத்தில் ஆண்டுக்கொரு முறையேனும் அலங்கார உற்சவம் நடைபெறுதிருப்பது மனதிற்கு உற்சாகமளிப்பதாயில்லை, அருள் மிகு ஐயனாராலயத் திருப்பணிகளில் முன்னின்றுழைத்த பெருமக்களும் குடமுழுக்கிற்கு ஆவன செய்தவர்களும் சிந்திக்கவேண்டிய விடயமிது.

பண்டைய் நாட்களில் யாழ்ப்பாணத்தில் "ஐயனார் ஆலயம்" என்றால் அது இவ்வாலயத்தையே குறிப்பிடுவதாகக் கொள்வர். அத்துணைச் சீரும் சிறப்பும் பெற்றிருந்த ஐயனாராலயம் புனருத்தாரணம் செய்யப்பெற்றுக் குடமுழுக்கு நடைபெறுவது சாலவும் பொருத்தமானதே. உலகெலாமாகி உடனுமாய் வேறாய் நிற்கும் பரம்பொருளை பசுவின் உடம்பில் செறிந்திருக்கும் பாலை அதன் முலைவழியாகப் பெறுதல்போல ஆலயத்தில் அமையச் செய்யப்படும் கிரியைகளே குடமுழுக்கு எனப்படும். இதனை விரிக்கிற் பெருக்குமென்றஞ்சி விடுக்கிறோம்.

குடமுழுக்கெனும் புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்ட அன்பர்களுக்கும் தமது சிரமத்தைப்பாராது முன்னின்றுழைத்த முன்னாள் நீதிபதி சைவத் திருவாளர் க. வை. நவரெத்தினம் அவர்களுக்கும் அருள்மிகு ஐயனார் சுவாமிகளின் அருள்நோக்குக் கிட்டுவதாக.

அருள்மிகு ஐயனார் ஆலயம் சிறப்புறவும் அவர் அடியார்கள் வளமாக வாழவும் ஆசிகூறி அமைகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள்
வழங்கிய

# வாழ்த்துரை

அறிவு படைத்த சான்றோர்கள் தமிழகத்திலும் ஈழத்திலும் கோயில்களை அமைத்து வழிபாடு செய்து வந்தனர். பண்டைக் காலத்து மன்னர்கள் தமது அரண்மனையிலும் பெரிதாகத் திருக்கோயில்களைப் புதுக்கி அழியாத புகழை நிலைநாட்டினார்கள்.

ஈழத்திலே இத்தகைய திருக்கோவில்கள் பல இருக்கின்றன. இறைவன் உருவத்திருமேனியில் நின்று அடியார்களுக்கு அருள்புரியும் தலம் ஆலயமாகும். விதிமுறையாக ஆலயத்தை அமைத்து அவரவர் விரும்பும் உருவத்திருமேனியைத் தாபித்துக் கும்பாபிஷேகம் செய்து வழிபட்டு வருவதை நாம் காண்கின்றோம்.

இந்தவகையில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடமேற்கு ஐயனார் கோவில் மகா கும்பாபிஷேகம் மிக விமரிசையாக நடைபெறுகின்றது. ஆகமங்கள் கூறும் கிரியைகளுள் முக்கியமானதாகவும், அருளுக்கே அடிப்படையானதாகவும் கும்பாபிஷேகக் கிரியைகள் விளங்குகின்றன. கும்ப – அபிஷேகம் என்பதன் பொருள் "குடத்து நீரை ஆட்டுதல்" என்பதாகும். அதாவது செம்பு, பித்தளை, வெள்ளி, தங்கம் இவற்றால் செய்யப்பட்ட குடம், செம்பு முதலியவற்றில் நீரை வடிகட்டி, நிறைத்து வாசனைப் பொருட்கள், பொற்றகடு, காசு முதலியவற்றையும் நீரிலிட்டு மேலே மாவிலை, தேங்காய், துணி முதலியவற்றைச் சாத்தி, அலங்கரித்து, அதில் இறைவனை ஆவாகனஞ் செய்து வணங்கி, அக்கினியை உண்டாக்கி முறையாக ஓமம்செய்து, அக் கும்பத்தினால் மூர்த்தியை அபிஷேகம் செய்வதாகும்.

கும்பாபிஷேகக் கிரியை முழுவதும் எங்கும் பரந்துள்ள இறைவனைத் திருக்கோயிலிலும் திருவுருவத்திலும் வெளிப்பட்டு நின்று திருவருள் புரியுமாறு வேண்டிக்கொள்ளும் பான்மையில் அமைந்துள்ளது.

உயர்ந்த தத்துவ அடிப்படைகள் பலவற்றைக் கொண்டு ஐயனார் கோயிலில் நடைபெறும் மகா கும்பாபிஷேகம் இனிது நிறைவேறுவதாக. ஐயனார் கோயில் திருத்தல வரலாற்று நூல் வெளியீடு கும்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஷேகத்தன்று நடைபெறுகின்றது. இவ்வூரிலே இதுவரை காலமும் மேற்கொள்ளப்படாத முயற்சி இதுவாகும். இதனை எழுதியவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் ப. கணேசலிங்கம். அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

அருகிலுள்ள ஏனைய கோயில்களான காளி கோயில், பிள்ளையார் கோயில்களின் திருத்தல வரலாற்றினை எழுதுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றார்.

மகா கும்பாபிஷேக மலராக கோயிற் திருத்தல வரலாற்று நூல் வெளிவருவது பெருமைக்குரிய விடயமாகும். இத்தருணத்தில் கோயில் நிருவாக சபையினரையும் உறுப்பினரையும் வாழ்த்துகின்றோம். மக்கள் யாவரும் ஐயனார் அனுக்கிரகத்தைப் பெற்று உய்வுபெற எமது வாழ்த்துக்கள்.



உ

வண்-வடமேற்கு ஐயனார் கோயிலடி

அருள்மிகு சர்வசக்தி அன்னை ஸ்ரீ மங்கள மகாகாளி அம்பாள் ஆலய

பிரதமகுரு ஆலயப் பிரவீன ஆகமாச்சார்ய

## சிவபிரம்மஸ்ரீ பால-பஞ்சாக்ஷரக் குருக்களவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

வேதநெறி தழைத்தோங்க மிதசைவத்துறை விளங்கும் வண்ணை நகரின் சைவவானில் ஒளிவிட்டிலங்கும் வண்மேற்கில் தலைசிறந்து விளங்கும் ஐயனார் கோயிலடியில் திரிகோணமண்டலம் போன்ற அமைப்பில் விநாயகர், மங்கள மகாகாளி அம்மனுடன் பிந்து நுனியில் வீற்றிருந்து, பேராயிரம் பரவி வானோரேத்தும் பெம்மான் எனவும் தீராத நோய் தீர்த்தருள வல்லான் எனவும், அடியார்களுக்கு வாராத செல்வம் வருவிப்பவருமான பூரண புட்கலையுடன் கூடிய அரிகரபுத்திரரான (ஐயனார்) ஆலயம் அமைந்துள்ளது எங்கள் எல்லோருக்கும் ஒரு பெரும் பேறு. இவ்வாலயம் மிகத் தொன்மையுமானதால் தலப் பெயருக்கும் காரணமாயிருக்கிறார். ஐயனார் கோயிலடி என்றால் வண்ணார்பண்ணையைத்தான் முதல் குறிப்பாகவும், நாவில் எழுவதும் அதுவே.

இவர் பார்வதி பரமேஸ்வரருக்கு ஆசைப் புத்திரனாகவும் கணபதி கந்தனுக்கு பிரிய தம்பியாகவும், சகல கலைகளையும் அருளாகக்கொண்டிருந்தவர் எனவும் அமிர்தத்தைப் பகிர்ந்துகொடுத்த கோகினி ரூபத்திலான விஷ்ணுவும், விஷத்தை விழுங்கித் தேவர்களைக் காத்தசிவனும் ஒருவருக்கொருவர் மயங்கியதால் தோன்றியவர் அரிகரபுத்திரன் என்றும், இச்சா கிரியாவெனும் பூரண, புட்கலா என இரு மனைவியரும் ஏற்பட்டு, பூரண புட்கலாம்பிகா சமேத அரிகர புத்திரன் (ஐயனார்) ஆன்மகோடிகளுக்கு துன்பந் தீர்த்து, இன்ப அருளை வழங்கிக்கொண்டெழுந்தருளி ஐயனார் கோயிலடியின் பெருமைக்கும் சிறப்புக்கும் காரணமாயிருக்கிறார்.

அவரின் ஆலயம் புதுப்பிக்கப்பெற்று வரையறுக்கப்பெற்ற வீதியுடன் கம்பீரமான மண்டபங்களுடனும் வர்ணக் கலையழகு மிக்க கர்ப்பக்கிரக விமானத்துடனும் ஆதி ஐயனார் என பழமைக்கு எடுத்துக்காட்டாக அடியார்களின் பக்திமேலீட்டால் தாமே சலம்பூவொடு தூபம், கற்பூர தீபம்காட்டி வணங்கும் வாய்மையாக மூலவர் பின் பக்கத்தில் அமைந்திருப்பதும், ஐயனார் கோயிலடிப் பெருமக்களின் அறத்திருப்பணியான அருந்திருப்பணியானது அம்மக்கள் மனதில் என்றும் நின்று நிலவவும், புதுப்பித்த புதுத்தோற்றத்துடன் அண்டிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணடைந்த மக்களின் மனோபீஷ்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்க அவரிடத்தில் நீங்காத பக்திகொள்வதும், திருப்பணியை இனிதே நிறைவேற்றி குடமுழுக்கு விழாவையும் ஏற்படச்செய்து மகேஸ்வர பூசையில் பூரண புட்கலாவுடன் ஐயனாரும் ஒருவாய்கண்டு உணர்வதும், இப்பெருந்தொண்டு ஐயனார் கோயிலடி மக்களுக்கும் ஏனைய மக்களுக்கும் பெருமனத்தினை மகிழ்விக்கும் என்பதுடன் எமக்கும் ஏற்படும் என்பது எனது வேணவா. எல்லாத் திருத்தொண்டுகளும் இனிதே நிறைவேறிச் சிறக்க சகல வைபோகங்களுடன் வாழ ஐயனார் திருவருள் துணை நிற்பாராக என எண்ணி ஐயனாரைப் பிரார்த்தித்து மக்களை வாழ்த்துகிறேன்.



உ

முன்னாள் நீதியரசர், ஐயனார் கோயிற் திருப்பணிச் சபைத் தலைவர்

## திரு. க. வை. நவரத்தினம் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

ஐயனார் கோயிலடி என யாவராலும் போற்றப்படும் கிராமமானது யாழ்ப்பாணத்தின் கண்ணேயுள்ள வண்ணார்பண்ணையின் வடமேற்குப் பகுதியிலே அமைந்துள்ளது. இங்கு கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்ற ஐயனார் கோயிலின் பெயரினாலேயே இக்கிராமத்துக்குப் பெயர் வந்தது. இத்தகைய பெருமைவாய்ந்த ஊரிலே இதுவரை காலமும் மேற்கொள்ளாத முயற்சியாக திருத்தல வரலாறு பற்றிய நூல் முதன் முதல் ''ஐயனார் கோயிலைப்'' பற்றி எழுதியுதவிய திரு. ப. கணேசலிங்கம் அவர்களுக்கும், இப் புத்தகத்தினை அச்சிட்டு இக் கும்பாபிஷேக நன்னாளிலே வெளியிட முன்வந்துள்ள திரு. இ. தவகோபால் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஐயனார்கோயிற் திருப்பணி வேலைகளுக்குப் பலவகையாலும் உதவிய அன்பர்களுக்கும், என்னோடு தோளோடு தோள்நின்றுதவிய இளைஞர் குழுவுக்கும், பெரியோர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நாள்தோறும் செய்துவரும் கோயில் வழிபாட்டில் ஏற்படும் பிழைகளை மகோற்சவ தரிசனத்தால் நீக்கலாம். மகோற்சவ தரிசனத்தில் ஏதும் பிழைகள் நேரிடின் அவைகள் கும்பாபிஷேகத்தால் தீரும். எனவே மகா கும்பாபிஷேகம் ஒரு ''பெருஞ் சாந்தி'' என்று சைவப்பெரியோர் கூறுகின்றனர். மகா கும்பாபிஷேகத்தால் ஏற்படும் அருளும், அன்பும், பயனும் மிகப்பெரியது. இவைகளை மக்கள் என்றும் இறைவனிடம் வேண்டிநிற்கின்றனர். ''வையகமும் துயர் தீர்கவே'' என்று ஞானசம்பந்தப் பெருமான் பாடியருளினார். இவ்வையகம் முழுவதும் அன்பும் அருளும் ஓங்க வேண்டுமென்று, ஸ்ரீ பூரணாம்பா புட்கலாம்பா சமேத ஹரிகரப் பெருமானின் திருவருளை வேண்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அணிந்துரை

**கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்**

(தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.)

யாழ்ப்பாணத்திலே திகழும் திருக்கோயில்களின் வரிசையில் ஐயனார் கோயில்களும் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளன. வண்ணார்பண்ணையில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள ஐயனார் அவ்வூர் மக்களின் நம்பிக்கைக்கும் வழிபாட்டிற்கும் உரிய தெய்வமாக விளங்கி வருகின்றார். ஐயனார் கோயில் அமைந்துள்ள காரணம்பற்றி 'ஐயனார் கோயிலடி' என இப்பிரதேசம் பெயர் பெற்றுள்ளதிலிருந்து இக்கோயிலின் பழைமையை நாம் ஓரளவு ஊகிக்கலாம்.

இத்தகைய சிறப்புப் பெற்ற ஐயனார் கோயிலுக்கு அருகே விநாயகர் ஆலயமும் காளிகோயிலும் சிறப்புற்று விளங்குகின்றன. கோயில்கள் பல அமைந்து விளங்கும் இச் சூழல் காரணமாக வண்ணார்பண்ணை நகரை ஒரு 'கோயில் நகரமாக' நாம் காணும் பேறு பெற்றுள்ளோம். இவ்வூரில் பலகாலமாக விளங்கி வரும் இக்கோயிலின் சிறப்பு, வரலாறு, வழிபாட்டு முறைகள் போன்ற அம்சங்களை உள்ளடக்கிய வரலாற்று நூல் ஒன்று இதுவரை உருவாகவில்லை. சமயம், பண்பாடு பற்றிப் பாடசாலைகளிலும் பல்கலைக் கழகத்திலும் விரிவாகவும் ஆழமாகவும் கற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ள இற்றைக் காலத்தில் கோயில் பற்றிய இத்தகைய நூல்கள் இன்றியமையாது தேவைப்படுகின்றன. ஒரு பிரதேசத்தில் விளங்கும் திருக்கோயில் பற்றிய வரலாற்றை அறிவதன் மூலம் அப்பிரதேச மக்களது பண்பாட்டினை நாம் அறியக்கூடியதாகவுள்ளது. இவ்வகையில் திருக்கோயில்கள் யாழ்ப்பாணத்து மக்களது சமய வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து வந்துள்ளன. இவ்வாறு திருக்கோயிலோடு தொடர்புடைய பல்வேறு அம்சங்களை அறிந்துகொள்வதற்குத் துணை செய்யும் வகையில் வண்ணார்பண்ணை ஸ்ரீ பூர்ணாம்பா புட்கலாம்பா சமேத ஹரிஹரபுத்திர ஐயனார் கோயில் பற்றிய வரலாற்று நூலொன்றினை இதேயிடத்தைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயில்பவரும் எனது மாணவனுமாகிய திரு. ப. கணேசலிங்கம் அவர்கள் எழுத முன்வந்திருப்பது பாராட்டுக்குரிய தொன்றாகும்.

இத்தகையதொரு அரிய முயற்சியின் பயனாய் இவ்வாலயத்தைப்பற்றி ஏனையோரும் அறியக்கூடிய வாய்ப்புக் கிட்டியுள்



ளது. இளைஞராகிய திரு. ப. கணேசலிங்கம் சிறுவயது முதல் சமயம், தமிழ் ஆகிய இருதுறைகளிலுல் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். இத்தகைய ஈடுபாடு இந்நூல் உருவாவதற்கு அவருக்கு பெருந்துணை புரிந்துள்ளது.

ஐயனார் கோயில் வரலாறுபற்றிக் கூறும் இந்நூலில் பல்வேறு அம்சங்கள் இடம்பெறுகின்றன. கடவுள் வணக்கத்தையடுத்து இக்கோயில் அமைந்துள்ள ஊர்ச்சிறப்புப் பற்றி எடுத்துக் கூறப்படுகின்றது. கோயிற் சூழலும் அக் கோயிற் சிறப்பும் மூர்த்தி விசேடமும் சிறப்பாக விளக்கப்படுகின்றன. ஐயனார் வழிபாட்டின் தொன்மை பற்றிச் சமய இலக்கியங்களைச் சான்றாகக் கொண்டு எடுத்துக் கூறப்படுகின்றது. ஐயனார் பற்றிய தெய்விக வரலாற்றுக் கதைகளும் கருத்துக்களும் இந்நூலிற் சிறப்பிடம் பெறுகின்றன. (பக். 21 – 32). ஆகமங்கள், புராணங்கள், திருமுறைகள் போன்ற சமய இலக்கியங்களிலிருந்து ஐயனார் பற்றிய சில கருத்துக்கள் இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ஐயனாருக்குரிய பெயர்களையும் அப்பெயர்களின் விளக்கங்களையும் தொகுத்துத் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கதொரு முயற்சியாகும். ஐயனாரது தெய்விகச் சிறப்பை மேம்படுத்தும் வரலாற்றுக் கதைகள் சிலவும் இந்நூலில் இடம்பெறுகின்றன. (பக். 27–29)

இலங்கையில் ஐயனார் வழிபாடு பற்றி மிகச்சுருக்கமாக ஆராயும் திரு. ப, கணேசலிங்கம் வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலின் வரலாற்றினை, கிடைக்கப்பெற்ற சில விபரங்களின் அடிப்படையில் தொகுத்துக் கூறுகின்றார். கோயிற் சிறப்பு, மூர்த்திச் சிறப்பு, அங்கு இடம்பெறும் நித்திய, நைமித்தியக் கிரியை மரபுகள், ஐயனார் வழிபாட்டின் பலன்கள், கோயில் ஸ்தாபகரது வரலாறு, கோயிற் குருக்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள் ஆகிய அம்சங்கள் இந்நூலை அணிசெய்கின்றன.

திருக்கோயில் ஒன்றின்மீது மக்கள் காட்டும் ஈடுபாடு அக்கோயிலுக்குரிய திருப்பணிகள் மூலம் அறியலாம். அவ்வகையில் இக் கோயிற் திருப்பணிகள் பற்றிய விபரங்களும் இந்நூலில் இடம்பெறுகின்றன. (பக். 39 – 40)

இக்கோயில் பற்றிய விபரங்களோடு புகைப்படங்களும் இடம்பெற்று இந்நூலின் சிறப்பினை மேம்படுத்துகின்றன. இக் கோயிலுக்குரிய வரலாற்று நூல் ஒன்று இல்லாத குறையை நிறைவு செய்யும் வகையில் வெளிவரும் இந்நூல் இற்றைச் சூழ்நிலையில் முக்கியத்துவம் பெறுகின்றது. ஐயனார் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும், வழிபாட்டு முறைகள் பற்றியும் அத்தெய்வம் தொடர்பான வரலாற்றுக் கருத்துக்களையும் அறிய விழைபவருக்கு இந்நூல் பல விபரங்களைத் தருகின்றது. சிறிய கோயில் பற்றிய நூலாக அமையினும் அதை அடிப்படையாகக்கொண்டு இக்கோயிலுக்குரிய தெய்வம்பற்றிய பலவேறு விபரங்கள் இந்நூலில் உள்ளடங்கியுள்ளமை இதன் சிறப்பமிசங்களில் ஒன்ருகும்.

திரு. ப. கணேசலிங்கம் அவர்கள் இதுபோன்ற சமய நூல்களை மேன்மேலும் வெளியிட்டுச் சமய உலகுக்குத் தொண்டாற்றத் திருவருள் பாலிக்கும் வண்ணம் ஸ்ரீ ஐயஞரை மனதார வேண்டுகின்றேன் சமயத்துறையில் ஆர்வமிக்க இளைஞராகிய திரு. ப. கணேசலிங்கம் அவர்களது எதிர்காலச் சமயப்பணிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வகையில் தமிழ்கூறு நல்லுலகம் இந்நூலினை வரவேற்று ஆதரவு அளிக்குமென எதிர்பார்க்கின்றேன்.

திரு. ப .கணேசலிங்கத்தின் முயற்சிக்கு உறுதுணைபுரியும் வகையில் இந்நூலினைச் சிறப்புற அச்சிட்டு வெளியிடுவதற்கு முன்வந்த யாழ்ப்பாண இந்து இளைஞர் பேரவை ஆணையாளர் திரு இ. தவகோபால் அவர்களது பணியும் பாராட்டுக்குரியது

யாழ்ப்பாணம்
30-10-1985



உ

# முன்னுரை

யாழ்ப்பாணத்தின் வண்ணார்பண்ணையின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஐயஞர் கோயிலானது கிட்டத்தட்ட இருநூற்று ஆண்டுகள் பழமை வாய்ந்த ஒன்ருகவுள்ளது. ''மூர்த்தி சிறிதென்ருலும் கீர்த்தி பெரிது'' என்ற வாக்குக்கொப்ப இத்தலத்தின் மூர்த்தியும் இக்கோயில் அமைந்துள்ள சூழ்நிலையில் வாழ்கின்ற மக்களால் போற்றி வழிபடப்பெற்று வந்துள்ளது. இக்கோயிலோடு எனக்கு ஏற்பட்ட ஈடுபாடும், இக்கோயில்பற்றி பூசகரோடு அடிக்கடி மேற்கொண்டு வந்த உரையாடல்களுமே இந்நூல் உருவாகப் பெரிதும் காரணமாயின.

இக் கோயில் பற்றிய தகவல்கள் பெறுவதற்கு அரும்பெரும் முயற்சிகள் மேற்கொண்ட விடத்தும், கிடைக்கப்பெற்ற தகவல்களைக் கொண்டே இவ் வரலாற்று நூல் உருவாக்கம் பெற்றது. மேலும் இக் கோயில் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறுமிடத்து, அவற்றை இந்நூலின் அடுத்த பதிப்பிலே சேர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இலங்கையிலே பல்வேறு பகுதிகளிலும் பரந்து விளங்குகின்ற கோயில்களைப் பற்றியும், அவற்றின் வரலாறுகள் பற்றியும் எழுதி வெளியிடுவதற்கு பல்வேறு முயற்சிகள், அவ்வப்போது அறிஞர் பலரால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அறிஞருள் ஒரு சிலர் மாவட்டரீதியாக கோயில்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்கள். உதாரணமாக திருகோணமலை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இக் கோயில்பற்றிய வரலாறு எழுதுவதற்கு ஆர்வம் பிறந்ததே ஐயஞரின் திருவருளன்றி வேறில்லை. இந்நீண்டகால விருப்பம் உரியவகையில் நிறைவேறுவதற்கு உதவிய பெருமக்கள் பலராவர். அவர்கள் மனமுவந்து எனக்களித்த ஆதரவினுலும் உதவிகளினுலுமே, இற்றைவரை எதுவித வரலாறும் எழுதப்படாத நிலையில் ஒரு வரலாற்று நூலை உருவாக்குவதற்கு வாய்ப்பேற்பட்டது எனில் மிகையில்லை. பல தலைமுறைகளாக வாழ்ந்தவர்கள் இத்தகைய ஒரு வரலாற்று நூலை உருவாக்காது விட்ட குறையை, நிறைவு செய்யக்கூடிய வகையிலே இந்நூல் வெளிவருகின்றது;

இந்நூல் உருவாகுவதற்கு உதவிய அறிஞர் பெருமக்களுள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், எனக்கு கல்வியூட்டிய ஆசிரியர்கள், கோயிற்குருமார், வண்ணார்பண்ணை வாழ்மக்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்; இக் கோயில் வரலாற்று நூல் அமையவேண்டிய முறை பற்றியும் எடுத்துக் கூறி, அதற்குரிய அமைப்பினை வகுத்துத் தந்ததோடன்றி, இந்நூல் பற்றிய ஆலோசனை கூறி, இந்நூலின் முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையெழுத்துப் பிரதியை பல சிரமங்கள் மத்தியிலே மனம் கோணுது திருத்தித் தந்ததோடு, உரிய அறிவுரைகளும் வழங்கி, இந்நூலுக்குரிய அணிந்துரையை உவந்தளித்த, எனது ஆசிரியராகிய கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு எனது நன்றியுரித்தாகுக.

கோயில் பற்றிய வரலாற்று நூல் உருவாக்குவதற்கு பல ஆரம்ப தரவுகள் தேவைப்பட்டன. அத்தகைய தரவுகளை யான் தேடிக் கொண்டிருந்த வேளையிலே கச்சேரியில் இந்துக்கோயில் பற்றிய பதிவுப் புத்தம் பற்றியும், அந்நூல் பயன்படுத்துவதற்குரிய வழிவகைகளைக் கூறியும், கச்சேரியிலுள்ள அந்நூலை பிழையற எழுதியும், மொழி பெயர்த்துத் தந்தும், அச்சிடும் வேளையிலே கையெழுத்துப் பிரதிகளுடன் ஒப்புநோக்கிச் சரிபார்த்து தந்துதவியவர், எனது ஆசிரியராகிய பண்டிதர் க. உமாமகேஸ்வரன் ஆவார். அவருக்கு எனது மனமுவந்த நன்றிகள்.

கச்சேரிப் பதிவுப்புத்தகத்தைப் பார்ப்பதற்கு எனக்குப் பெரிதும் உதவியவர் இவ்வூர் வாசியும், முன்பு கச்சேரியில் வேலைபார்த்தவருமான திரு. த. சண்முகநாதன் அவர்களாவர். இப்புத்தகத்திலுள்ள பதிவுகளை பிழையற வாசித்து உதவியவர், ஆவணசாலையில் பல வருடம் சேவையாற்றிய அனுபவசாலியாகிய திரு. S. நடராசா அவர்களாவர். இவ்விருவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தொடக்கத்தில் இப்பதிவுப் புத்தகத்தின் தரவுகளைக்கொண்டு, வண்ணார்பண்ணை வடமேற்கு ஸ்ரீ விசுவேசப் பிள்ளையார் கோயில் வரலாற்றினை உருவாக்குவதற்கு யான் முயன்றபோது, ஐயனார் கோயில்பற்றிய தரவுகளும் ஓரளவு கிடைத்ததால், அதனை எழுதி வெளியிடுவதற்கு துணிந்தேன். அத்துடன் ஐயனார் கோயில் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகி கும்பாபிஷேகம் நடைபெறுவதற்குரிய சூழ்நிலை உருவாகியமையும் இத்தகைய நூல் ஒன்றினை உருவாக்கும் உற்சாகம் மேலிட்டது. இக் கோயில் பற்றிய தரவுகளை அறிவதற்கு பெருமளவு துணை புரிந்தவர் திரு. S. அப்பாத்துரையாவர். அவர் எனது வேண்டுகோளுக்கு ஏற்ப, முன்னர் கோயிற் பூசகராகப் பணிபுரிந்த சிவஸ்ரீ. சி. ஐயம்பிள்ளைக் குருக்களிடம் தொடர்புகொண்டு, கோயில்பற்றிய தரவுகளைப்பெற உதவியதோடு, குருக்களது வைரவிழா மலரினையும் தந்து, இந்நூல் உருவாகுவதற்குரிய ஆலோசனையையும் தந்தமைக்காக எனது நன்றிகள் உரித்தாகுக. சிவஸ்ரீ. சி. ஐயம்பிள்ளைக் குருக்களது வீட்டுக்கு இக் கோயில் பற்றிய தரவுகளைச் சேகரிப்பதற்கு சென்றபோதெல்லாம் அவர் அத்தகையவற்றை எடுத்துக் கூறியும், குறிப்புக்கள் பல எழுதுவதற்கும் பெரிதும் துணைபுரிந்தார். அவருக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



இவ்வூர் பற்றிய ஆலோசனைகளை நல்கிய "கலைஞானி ஸ்ருடியோ" அதிபர் அவர்களுக்கும், மற்றும் எனது ஆசிரியரும் யாழ். இந்துக் கல்லூரி உப அதிபருமான சைவசிகாமணி க. சிவராமலிங்கம்பிள்ளை அவர்களுக்கும் எனது நன்றிகள்;

இந்நூலுக்கு ஆசியுரையும், வாழ்த்துரையும் நல்கியவர்களுள் மனமுவந்து ஆசியுரை நல்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப் பரமாச்சாரிய சுவாமிகளதும் சிவஸ்ரீ. சி. ஐயம்பிள்ளைக் குருக்களதும் திருவடிகளுக்கு எனது பணிவான வணக்கம். வாழ்த்துரை வழங்கிய பிரம்மஸ்ரீ. பி. பா. பஞ்சாட்சரக் குருக்களது திருவடிகளுக்கும் எனது பணிவான வணக்கம். மேலும் இந்நூலுக்குரிய வாழ்த்துரையை தனது பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் தந்துதவிய எனது பெருமதிப்புக்குரிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தரும், எனது ஆசிரியருமான பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களுக்கும் எனது மனமுவந்த நன்றிகள் உரித்தாகுக. இக்கோயிலினுடைய வளர்ச்சிக்கு அயராது உழைத்து வருபவரும், பெருமதிப்புக்குரிய ஓய்வுபெற்ற நீதியரசர் க. வை. நவரத்தினம் அவர்கள் இந்நூல் உருவாகுவதற்குரிய உற்சாகத்தை அளித்ததோடு, வாழ்த்துரை ஒன்றினை உவந்தளித்தமைக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இக்கோயில் பற்றிய இந்நூல் அச்சேறி வெளிவருவதற்கு நிதி வழங்கி, காரண கர்த்தாவாக இருந்தவர் யாழ். இந்து இளைஞர் பேரவை ஆணையாளர் திரு. இ. தவகோபால் அவர்கள். காலத்தே செய்த உதவிக்கு அவருக்கு யான் என்றும் நன்றிக்கடப்பாடுடையேன்: இந்நூல் உருவாகுவதற்கு பெரிதும் உதவிய ஏனைய அன்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வணக்கம்

16, (54) ஒடை ஒழுங்கை,
ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

ப. கணேசலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"சுவாமியே சரணம் ஐயப்பா"

# பதிப்புரை

எமது முதலாவது வெளியீடு ஐயப்பனின் தலவரலாருக வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி. "மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது" என்ற வகையில் மிகவும் பிரபல்யமான ஐயனுரின் தல வரலாற்றை இந்நூலின்மூலம் திரு: ப. கணேசலிங்கம் அவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் எழுதியுள்ளார். இதற்கு ஆசியுரை வழங்கியருளிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமகாசந்நிதானம் அவர்களுக்கும், ஆலய முன்னுட் பூசகர் சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

வாழ்த்துரை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களுக்கும், கோயிற் திருப்பணிச் சபைத்தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. க. வை. நவரத்தினம் அவர்களுக்கும், பிரம்மஸ்ரீ பி. பா. பஞ்சாட்சரக் குருக்கள் (சமாதான நீதிபதி) அவர்களுக்கும் எமது நன்றிகள்.

அணிந்துரை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இந்நூலில் இடம்பெறும் நிழற்படங்களை பேபி போட்டோ மூலம் எடுப்பித்துதவிய திரு. ப. இந்திரசிறி அவர்களுக்கும் அதனை புளக்செய்து தந்த கொழும்பு ஸ்ருடியோ ஸ்தாபனத்தாருக்கும் எமது நன்றிகள்.

கோயிற் திருப்பணிக் கணக்குகளைச் சரிபார்த்து உதவிய முன்னுள் வங்கி ஊழியரும் ஸ்ரீ விசுவேசப்பிள்ளையார் கோயில் மனேச்சருமாகிய திரு. த. பத்மநாதன் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இந்நூலை மிகச்சிறப்பாக அச்சிட்டுதவிய யாழ்ப்பாணம் சாந்தி அச்சக முதல்வர் திரு. தி. நாகரத்தினம் அவர்களுக்கும், அவர்தம் அலுவலர்களுக்கும் நூலினை அச்சிடும்போது எமக்கு எல்லாவகையிலும் உதவிய எமதருமை ஐயனுர்கோயிலடிவாழ் சனசமூக நிலைய இளைஞர்களுக்கும் எமது நன்றிகள்.

23-10-85

இ. தவகோபால்

உ

# கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம் உறை யிறையே.

(திருஞானசம்பந்தர் தேவாரம்)

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் உனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

(திருஞானசம்பந்தர் தேவாரம்)

பார்த்தனுக் கருளும் வைத்தார் பாம்பரை யாடவைத்தார்
சாத்தனை மகனுய் வைத்தார் சாமுண்டி சாமவேதம்
கூத்தொடும் பாடவைத்தார் கோளரா மதியும் வைத்தார்
தீர்த்தமும் சடைமேல் வைத்தார் திருப்பயற் றூரனுரே.

(திருநாவுக்கரசர் தேவாரம்)

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

(பெரியபுராணம் - சேக்கிழார்)

சேரர் காவலர் விண்ணப்பஞ் செய்தவத் திருவுலாப் புறமன்று
சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்டமா சாத்தனுர் தரித்திந்தப்
பாரில் வேதியர் திருப்பிட வூர்தனில் வெளிப்படப் பகர்ந்தெங்கு
நார வேலைசூ ழுலகினில் விளங்கிட நாட்டினர் நலத்தாலே.

(பெரியபுராணம் - சேக்கிழார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் இன்பம் பெருகும் இயல்பினேடு(டு)
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்;

(பெரியபுராணம் – சேக்கிழார்)

பையரா அமளியானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே! ஓலம்; விண்ணேர்க்கு ஆதியே! ஓலம்; செண்டார்
கையனே! ஓலம்; எங்கள் கடவுளே! ஓலம்; மெய்யர்
மெய்யனே! ஓலம்; தொல்சீர் வீரனே! ஓலம்; ஓலம்.

(கந்தபுராணம்)

ஆரணச் சுருதியோர்சார் அடலுருத் திரன்என்று ஏத்தும்
காரணக் கடவுள்! ஓலம்; கடல்நிறத்து எந்தாய்! ஓலம்;
பூரணைக்கு இறைவா! ஓலம்; புட்கலை கணவா ஓலம்;
வாரணத்து இறைமேல் கொண்டு வரும்பிரான்! ஓலம் ஓலம்

(கந்தபுராணம்)

அரிய பூரணை புட்கலை யாமிரு
தெரிவை மார்முலைச் செங்கள பத்தொளி
விரவு சுந்தர மேருவொப் பாம்புயக்
குரிசி றண்டை குரைகழல் போற்றுவாம்,

(திருச்செந்தூர்ப் புராணம்)

திருச்சிற்றம்பலம்

# வண்ணார்பண்ணை ஊர்ச்சிறப்பு

இலங்கைத் தீவின் சிகரமாக விளங்குகின்ற யாழ்ப்பாண நகரிலே வண்ணார்பண்ணை அமைந்துள்ளது. இப்பெயர் வந்ததற்குரிய காரணமாக ஊர்ப்பெயர் உட்பொருள் விளக்கம் என்ற நூலின் பதினைந்தாம் பாடலில் பின்வருமாறு கூறப்படுகின்றது.

"மைக்கா ருறைமனை வண்ணார்நற்பண்ணை வளமும்" 1.

வண்ணார்பண்ணை என்ற பெயர் இவ்வூருக்கு இடப்பட்டதன் காரணம் அழகிய நெல்வயல் முதலிய ஏனைய வளங்களையும் கொண்டு விளங்குகின்ற ஊர் என்றபடியாற்போலும். இவ்வூர் பெயர்பற்றி இன்னும் சில கருத்துக்கள் இருக்கின்றன. அவை வருமாறு:–

ஒரு நகரத்திலே எந்தெந்தத் தொழிலைச் செய்கின்ற மக்கள் இருந்தார்களோ, அவர்களுடைய மரபுப்பெயரே அந்தந்த இடங்களுக்கும் வழங்கப்பெற்றன. அதன்பிரகாரம் நாம் உற்று நோக்குமிடத்து வண்ணவேலை செய்பவர்கள், அதாவது சித்திரம், சிற்பம் போன்ற கலைநுணுக்கம் கொண்டவர்கள் இவ்வூரிலே குடியமர்த்தப்பட்டு வாழ்ந்த காரணத்தால் இவ்விடப்பெயர் வந்தது எனக் கூறலாம். வண்ணவேலை என்று சொல்லுமிடத்து பலதரப்பட்ட தொழிலை மையமாகக்கொண்டு விளங்குவது. அதாவது ஓலையினுலே ஆக்கப்பெற்ற பெட்டிகள், பாய்கள் முதற்கொண்டு சீலைச் சித்திரங்கள் வரையும், சுவர் சித்திரங்கள் முதல் கோலமிடல் வரையும் இதில் அடங்குகின்றன;

அந்நியர் படையெடுப்புக் காரணத்தாலும், இப்படிப்பட்ட கலைநுணுக்கங்கள் கைவிடப்பட்டும், கைதொய்ந்தும் அற்றுப்போகும் காலநிலையில் தமிழரசர்கள் பாரதத்திலிருந்து மக்களைக் கொண்டுவந்து குடியமர்த்திய வம்சாவழியினரும் இன்னமும் இப்பகுதியில் வாழ்ந்துவருகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகவுள்ளவை: பிற்பட்ட காலம் வரைக்கும் நாம் காணக்கூடியதாயிருந்த வண்ணை வைத்தீஸ்வரன்

---

1: மைக்காருறைமனை – கரிய மேகங்கள் படிகின்ற உன்னதமான மாளிகைகளையும், வண்ணார்நற்பண்ணை வளமும் – அழகிய நெல்வயல் முதலிய ஏனைய வளங்களையும் எனப் பொருள் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் வசந்தமண்டபத்தின் இருமருங்கிலும் இருந்த சாயவேலைகளும் முகிலாப்புத் துணியும் சான்றுபகரும். பிரதான வீதிக்கும் கடற்கரை வீதிக்கும் நடுவே உள்ள வீதியில் அமைக்கப்பட்ட கிட்டங்கிகளின் மேல் பூசப்பட்டிருக்கும் சாயவேலைகளும், யாழ்நகரிலுள்ள கங்கா சத்திரத்தில் (இப்பொழுது தற்காலிக கொட்டிற் கடைகளாக மாற்றப்பட்டுள்ளன) உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் அமைக்கப்பெற்ற சாயவேலைப் படங்களும் சான்றுபகருகின்றன. வண்ண பண்ணை என்பதை "ஆர்" என்ற பலர்பால் விகுதி சேர்த்து காலப்போக்கில் வண்ணார்பண்ணை என அழைத்துவருகின்றனர்.

இன்னுமொரு கருத்தும் இவ்வூர்பற்றிக் கூறப்படுகின்றது. அதாவது இவ்வூரிலே வண்ணார் நிறைய வாழ்ந்தபடியால் இப்பெயர் ஏற்பட்டதாகும். வண்ணார் என்பது இங்கு சலவைத் தொழிலாளரைக் குறிக்கின்றது. துணியைச் சலவை செய்யும் இனத்தைச் சேர்ந்தவருக்கு யாழ்ப்பாண மரபின்படி கட்டாடி என்ற சொல்தான் ஆரம்பகாலத்தில் வழங்கிவந்த சொல்லாகும். இவர்கள் சிலகாலம் செல்வ வண்ணக்கர் செய்துவந்த சொக்கட்டான் பந்தல், முகிலாப்புக் கட்டில், தோரணவேலை போன்ற வேலைகளை கட்டாடிமார்களும் கையாண்டதால்தான் அவர்களுக்கும் இந்த வண்ணார் என்ற பெயர் வந்தது. எனவே இங்கு பாரம்பரியமாக வாழ்ந்தவர்கள், சித்திரவேலை செய்பவரே தவிர வேறு தொழில்கள் செய்பவர்களல்ல என்பது உற்றுநோக்கத்தக்கது.

## கோயிற்சூழல்

வண்ணை நகரிலே வாழ்கின்ற மக்கள் சைவ பாரம்பரியத்திற் திளைத்தவர்கள். தத்தமக்குரிய இஷ்டதெய்வங்களை வழிபடும் மரபுடையவர்கள் என்பதை இங்குள்ள கோயில்களின் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. இத்தகைய அருள்மூர்த்திகளில் சிவன், விநாயகர், முருகன், அம்பாள் மற்றும் பைரவர், ஐயனார், விஷ்ணு போன்ற பல தெய்வங்களை வழிபாடியற்றி வந்துள்ளனர். தமக்குரிய தெய்வமொன்றினை வழிபாடு செய்து, வேண்டிய இஷ்டசித்திகளைப் பெறுவதில் வண்ணார்பண்ணை மக்கள் ஈடுபாடுடையவராயினர். அதனாலேயே பலவடிவு கொண்ட உருவங்களையெல்லாம் இங்குள்ள மக்கள் வழிபட்டாலும் அனைத்தும் முடிவில் சிவவழிபாடுதான் என்ற முடிவினை நாம் சமயரீதியிலே அறிந்துகொள்ளக்கூடியதாயிருக்கின்றது.

இக்கிராமமானது ஒரு புண்ணிய பூமியென்று சொல்லத்தகுந்தது. ஏனெனில் இக்கிராமத்திலே ஏராளமான இந்துக்கோயில்கள் அமைந்திருக்கின்றன. இக்கிராமத்திலே விநாயகர், முருகன், அம்மன், சிவன்,



விஷ்ணு, ஐயனார், பைரவர் ஆகிய தெய்வங்களுக்குரிய ஆலயங்கள் உள்ளன. சமாதி ஆலயங்கள் என்பனவும் அத்தோடு சிறப்புற்று விளங்குகின்றன. வண்ணார்பண்ணையானது கோயில்கள் பல நிறைந்த ஓர் கோயில் நகரமாக அமைந்து விளங்குவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். "கோயிலில்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்ற உலகநாதர் வாக்குக்கு இணங்க எமது கிராமமானது பல கோயில்களைக்கொண்ட புனிதமான இடமாக அன்றுதொட்டு இன்றுவரையும் திகழ்ந்துவருவது ஒரு சிறப்பம்சமாகும்.

இக்கிராமத்தின் கண்ணே பல இயற்கை வளங்கள் நிறைந்துள்ளன. பல தொழில்களையும் மேற்கொள்கின்ற மக்கள் இங்கு வாழ்கின்றனர். இவற்றாலே இவ்வூரானது பல வளங்களையும் பெற்றுத் திகழ்கின்றது. இவ்வூர் மக்கள் தங்கள் வாழ்க்கையிலே எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், முதலில் கோயில் வழிபாட்டுடனே செய்வது வழக்கம். காரணம் தாம் மேற்கொள்கின்ற காரியங்கள் எந்தவிதத்திலும் முட்டின்றி இனிது நிறைவேறவேண்டும் என்பதற்காகவேயாம்.

## கோயிற் சிறப்பும் மூர்த்தி விசேடமும்

### ஐயனார் வழிபாட்டின் தொன்மை

ஐயனார் வழிபாடானது சங்க காலத்திலிருந்தே தமிழ் நாட்டிலுள்ள மக்களால் பின்பற்றப்பெற்று வருகின்றது. சங்க காலத்திலே வாழ்ந்த புலவர்கள் பலருக்கு ஐயனாரின் பெயராகிய சாத்தன், சாத்தனார் என்ற பெயர்கள் இருப்பதன்மூலம் இதனை அறியக்கூடியதாயிருக்கின்றது. இடத்தின் பெயர்களைக்கொண்டும் அறியக்கூடியதா யிருக்கின்றது. சாத்தன்குளம், சாத்தனூர் என்ற பெயர்கள் இடத்திற்குச் சூட்டப்பெற்றனவாகும். ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய மணிமேகலை ஆசிரியருக்கும் சீத்தலைச் சாத்தனார் என்று பெயர் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் காவிரிப்பூம் பட்டினத்தில் திருமால், சிவன், பலராமன், அருகன் முதலியவர்களின் கோயில்களுடன் சாஸ்தாவின் புறம்பணையான் கோட்டமும் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். எனவே மற்றத் தெய்வங்களுடன் சேர்ந்து சாஸ்தா வணங்கப்பட்டுவந்தது தெளிவாகிறது. மாடலன் என்கின்ற அந்தணர் சாஸ்தாவை வழிபட்டு முற்பிறப்பை அறியும் வல்லமை பெற்றதாக "சிலப்பதிகாரம்" கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டிலே ஐயனார் வழிபாடு இருந்துவந்தமைக்கு திருமந்திரத்திலே இடம்பெறுகின்ற "ஐயனார்" என்ற பெயர் ஆதாரமாக இருக்கின்றது. திருமந்திரத்திலே பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

"தானவர் சட்டர் சதுரர் இருவர்கள்
ஆனஇம் மூவரோ டாற்ற வராதிகள்
ஏனைப் பதினைந்தும் விந்துவும் நாதமுஞ்
சேனையுஞ் செய் சிவசக் கரந்தானே.

இங்கு தானவர் என்பது ஊர்க்காவலராம் ஐயனாரைக் குறிக்கின்றது. (தானவர் – ஐயனார்) இன்னுமொரு திருமந்திரத்தில் வேறோரிடத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

"ஆங்கு வடமேற்கில் ஐயனார் கோட்டத்திற்
பாங்கு படவே பலாசப் பலகையிற்
காங்கரு மேட்டிற் கடுப்பூசி விந்துவிட்(டு)
ஓங்காமல் வைத்திடும் உச்சாட னத்துக்கே".

இங்கு ஐயனார் கோட்டம் என்பது ஐயனார் கோயிலைக் குறிப்பிடுவதனால் திருமூலர் காலத்தில் ஐயனார் வழிபாடு தமிழகத்திலுண்டென்பது தெளிவாகிறது.

தேவாரம் பாடியருளிய திருநாவுக்கரசு சுவாமிகள் தன்னுடைய திருப்பயற்றூர்ப்பதிகத்திலே நாலாம் பாடலிலே பின்வருமாறு பாடிச் செல்வதிலிருந்தும், ஐயனார் சிவபரஞ் சுடரினர் என்பதும் ஐயனார் வழிபாடு தமிழகத்தில் நிலவியது என்பதும் அறியக்கூடியதாக இருக்கின்றது. அத்தேவாரம் வருமாறு:-

பார்த்தனுக் கருளும் வைத்தார் பாம்பரை யாடவைத்தார்
சாத்தனை மகனாய் வைத்தார் சாமுண்டி சாமவேதங்
கூத்தொடும் பாடவைத்தார் கோளரா மதியம் நல்ல
தீர்த்தமுஞ் சடைமேல் வைத்தார் திருப்பயற் றூரனாரே.

புறப்பொருள் வெண்பா மாலை என்னும் புறப்பொருள் இலக்கண நூலினை இயற்றிய ஆசிரியர் பெயர் ஐயனார் என்பதாலும், ஐயனார்

1. திருமந்திரம் - நாலாந் தந்திரம் - (2) திருவம்பலச் சக்கரம் பாடல் – 988.

2. திருமந்திரம் - நாலாந் தந்திரம் – (2) திருவம்பலச் சக்கரம் பாடல் - 999.



வழிபாடு தமிழ் நாட்டில் இருந்தது என்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது, சேக்கிழார் பெருமான் அருளிச்செய்த பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரியபுராணத்தில் வெள்ளை யானைச் சருக்கத்தில் சுந்தரருடன் கயிலை சேர்ந்த சேரமான் பெருமான் அடிகள் தாம் இயற்றிய திருக்கைலாய ஞான உலாவைத் திருக்கைலையில் சிவசந்நிதியில் கூறும்போது, அங்குக் கேட்டுக்கொண்டிருந்த மாசாத்தன் சோழ நாட்டைச் சேர்ந்த திருப்பிடவூர் என்ற தலத்தில் வந்து அந்த ஞான உலாவைத் தான் கேட்டவாறே கூறினார் என்ற செய்தி கடைசிப் பாடலில் காணப்படுகின்றது. அப்பாடல் பின்வருமாறு:-

"சேரர் காவலர் விண்ணப்பஞ் செய்தவத் திருவுலாப் புறமன்று
சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்ட மாசாத்தனார் தரித்திந்தப்
பாரில் வேதியர் திருப்பிட வூர்தனில் வெளிப்படப் பகர்ந்தெங்கு
நார வேலைசூ ழுலகினில் விளங்கிட நாட்டினர் நலத்தாலே" 1.

இப்பெரியபுராணப் பாடல் மூலமும் ஐயனார் வழிபாடு வலியுறுத்தப்படுகின்றது. கி. பி. 8ம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 12ம் நூற்றாண்டு வரையும் தமிழில் எழுந்த திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி என்ற நிகண்டுகளில் ஐயனார் பெயர்கள் குறிப்பிடப்படுவதை நோக்குமிடத்து, இவை நன்கு புலப்படுகின்றது. அப்பாடல்கள் வருமாறு:-

"கோழிக் கொடியோன் சாதுவாகனன்
காரி சாத்தன் கடல்நிற வையன்"

பிங்கலந்தை என்ற நிகண்டில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

"சாத வாகனன் கோழிக் கொடியோன்
சாத்தன் வெள்ளை யானை வாகனன்
காரி செண்டாயுதன் கடல்நிற வண்ணன்
பூரணை கேள்வன் புட்கலை மணாளன்
ஆரியன் அறத்தைக் காப்போன் யோகி
அரிகர புத்திரன் ஐயன் பெயரே."

சூடாமணி என்ற நிகண்டிலே பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது:

"காரியே புறத்தவன் பூங்கடல் வண்ணன் நெடிய சாத்தாப்
பூரணை கேள்வன் யோகி புட்கலை தன்மணாளன்
ஒருமா சாத்தன் செண்டாயுதன் வெள்ளை யானையூர்தி
சூரியன் அறத்தைக் காப்போன் அரிகர குமரன் ஐயன்".

1. பெரியபுராணம் - வெள்ளானைச் சருக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிருமாண்ட புராணத்தில் பூதநாதோ உபக்கியானத்தில் ஐயப்பனின் திவ்விய சரித்திரம் கூறப்பட்டுள்ளது, கச்சியப்பர் இயற்றிய கந்தபுராணத்திலும் ஐயனார் என்ற சாஸ்தா இடம்பெற்றிருக்கிறார். ஆழ்வார், நாயன்மார் காலத்திலும் சாஸ்தா வழிபாடு இருந்ததாக அறியக்கிடக்கிறது,

திருவையாறு - கும்பகோணம் பாதையிலுள்ள ஈச்சங்குடியில் ஐயனார் கோயில் உள்ளது. "உடைப்பங்கரைஐயனார்" பூரணை புட்கலை சகிதம் இங்கு காணப்படுகிறார். சீர்காழியில் தென்பாதித் தெருவில் சாஸ்தாவின் கோயில் உள்ளது. இப்பகுதிக்கு 'கைவிளாஞ்சேரி' என்று பெயர். இந்திராணிக்கு ஆபத்து வரும்போது சாஸ்தா காப்பாற்றிய இடமாதலால் கைவிடான்சேரி எனப்பட்டது. அது "கைவிளாஞ்சேரி"யாகிவிட்டது.

காவிரிப்பூம் பட்டினத்தில் சாஸ்தாவுக்கு கோயில் உள்ளது. "பிடாரி" என்று இங்கு ஐயப்பன் அழைக்கப்படுகிறார். ஆனைதாண்டவபுரத்திலும் ஐயப்பனுக்கு ஆலயம் உள்ளது. பெயர் திருவாசமூர்த்தி கொள்ளிடக்கரையிலுள்ள மெய்யாற்றூரில் ஐயப்பன் கோயில்கொண்டிருக்கிறார். காஞ்சி காமாக்ஷி அம்மன் கோயிலில் சாஸ்தாவுக்குச் சந்நிதி உள்ளது. பூர்ண புட்கலா தேவிகளுடன் காணப்படுகிறார். இக் கோவிலில் காவல் தெய்வம் இவரே. காவலை மேற்கொண்ட சாஸ்தா பற்றி ஒரு பழம்பாடல் இருக்கின்றது.

வடஆற்காடு மாவட்டத்தில் படவேடு (படைவேடு) என்ற இடத்தில் ரேணுகாதேவிக்கு ஒரு ஆலயம் உள்ளது. அங்கு ஐயப்பன் யானை மீது அமர்ந்து காட்சிதருகிறார். அவரது தியான சுலோகத்திற்கு ஏற்றபடி இத் திருவுருவம் அமைந்துள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் சிங்கம்பட்டி மலையில் பாபநாசம் மேலணை சமீபம் உள்ள சொரிமுத்து ஐயனார் ஆலயமும், சீவலபேரி பூலாவுடையார் ஐயனார் ஆலயமும் மிகப் பிரசித்திபெற்றவை, பொருநை மாநதி வடகரையிலுள்ள செப்பறையில் நல்லதம்பி சாஸ்தா எழுந்தருளியிருக்கிறார். கோயம்புத்தூரிலும் சென்னை நுங்கம்பாக்கத்தில் மகாலிங்கபுரத்திலும் ஐயப்பனுக்கு ஆலயம் அமைத்திருக்கிறார்கள்.

இவற்றின்மூலம் ஐயனார் வழிபாடு எத்தகைய தொன்மை வாய்ந்தது என்பதை அறியக்கூடியதாயிருக்கின்றது. கந்தபுரரணம், காஞ்சி புராணம், உபதேசகாண்டம், பத்மபுராணம் என்னும் நூல்களில் அமுதம் பெறுவதில் அமரர்களுக்கும் அசுரர்களுக்கும் கலகம்மூள, அதை நீக்கும் பொருட்டு மோகினி வடிவங்கொண்ட நாராயணனுக்கும் பரஞ்சுடராம் முதல்வர்க்கும் ஐயனார் தோன்றினார் எனக் கூறப்படுகின்றது.



## ஆகமங்களில் ஐயனார்பற்றிய கருத்துக்கள்

ஐயனாரைப்பற்றி எவ்வாறு ஆகமங்கள் குறிப்பிடுகின்றன என்பதை நோக்குவோம். சாஸ்தா என்ற சொல் உலகங்களை ஆள்பவர் என்ற பொருளையும், ஆணை செய்பவர் என்ற பொருளையும், மக்களின் மனங்களில் ஊடுருவியவர் என்ற பொருளையும் தருவதாகக் கூறப்படுகின்றது. ஐயனார் பதினாறு பேதங்களை உடையவர் என்று தியான ரத்னாவளி என்ற ஆகம பத்ததி கூறுகின்றது. ஐயனாரின் பதினாறு பேதங்களாவன:– (1) மதகஜ சாஸ்தா (2) மோகினி சாஸ்தா (3) அமிருத சாஸ்தா (4) கிராம சாஸ்தா (5) உக்ர சாஸ்தா (6) வீர சாஸ்தா (7) லட்சுமி சாஸ்தா (8) பாலசாஸ்தா (9) மதன சாஸ்தா (10) பீஷண சாஸ்தா (11) ருத்ர சாஸ்தா (12) வரத சாஸ்தா (13) அசுவ சாஸ்தா (14) சௌந்தர சாஸ்தா (15) புவன சாஸ்தா (16) மகா சாஸ்தா ஆகியனவாகும்.

சாஸ்தாவின் மனைவியர் திருநாமம் பூரணாதேவி. இவள் சௌகந்திகன் என்ற அரசனுடைய புதல்வி. மற்றைய மனைவி பெயர் புஷ்கலா தேவி. இவள் அம்பாராஜனுடைய புதல்வியாவாள். ஐயனாருக்கு இரு மனைவிமார்கள் உண்டு. சாஸ்தாவின் பரிவாரங்களாவன:- மகாகாளன், கோப்தா, பிங்களாக்ஷன், வீரசேனன், சாம்பவன், திரிநேத்திரன், சூலி, தக்ஷன், பீமரூபன் முதலியோராவர். சாஸ்தாவின் வாகனங்களாவன குதிரை, யானை என்பன. இவ்விரு வாகனங்களை நாம் ஐயனார் கோயிலின் வாயிலில் காணக்கூடியதாயிருக்கிறது. சாஸ்தாவினுடைய கொடிகளாவன:- யானைக்கொடி, கோழிக்கொடி என்பனவாகும்.

சுப்பிரபேத ஆகமத்தில் ஐயனாருடைய தோற்றம்பற்றிக் கூறப்படுமிடத்து– "ஐயனார் இரண்டு கண்களும் இரண்டு கைகளும் கொண்டவர். கரியமேனியில் வெண்ணிறப் பூணூல் அணிந்தவர். ஆபரணங்கள் அணிந்தவர். நாய், கோழி, ஆடு இவைகளோடு விளையாடுபவர். எல்லாச் சித்திகளையும் அளிக்கவல்லவர். மதனை, வர்ணினி என்ற இரு மனைவியருடன் திகழ்பவர். பெருவயிறும், பேருடலும், நீளமான அளகங்களால் விளங்கும் தலையும் உடையவர். இடது கையில் தடியும், வலது கையில் வளைதடியும் உடையவர். பழம், தளிர் இவைகளைக் கையிற் கொண்டவர். மடக்கிய கால்மீது கையை வைத்திருப்பவர்" என்ற விபரங்களை அறிய முடிகின்றது.

அம்சுமத்பேத ஆகமத்தில் ஐயனாருடைய தோற்றப்பொலிவு பின்வருமாறு:– ஐயனார் வெண்ணிற மேனி உடையவர் என்றும், முக்கண்ணர் என்றும், சாந்தமானவர் என்றும், வெண்பட்டாடை உடுத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மபீடத்தில் அமர்ந்திருப்பவர் என்றும், அபயம், வரதம், சத்தி, கேடயம் இவைகளைத் தாங்கும் நான்கு கைகளை உடையவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

பூர்வகாரண ஆகமத்தில் ஐயனாரைப்பற்றிப் பின்வருமாறு கூறப் படுகின்றது. ''சாஸ்தா, சாந்தமூர்த்தி, இரண்டு கைகள் உள்ளவர்; கருநிற மேனியர்; தூக்கி மடக்கிய இடது கால்மீது இடது கையையும் தொங்கவிடப்பட்ட வலது காலையும் உடையவர்; வளை தடி, வச்சிராயுதம் உடையவர்; நீலநிற கேசம் உடையவர்.; யானையை வாகனமாகவும், கொடியாகவும் கொண்டவர்; நீலம், வெள்ளை ஆகிய நிறங்களையுடைய குதிரை, எருது ஆகியவற்றை வாகனங்களாகக் கொண்டவர்; நான்கு கைகளை உடையவர்; வீராசனத்திலும், யோகாசனத்திலும் வீற்றிருக்கும் ஞானி என சித்திரிக்கப்படுகின்றார்.

## ஐயனார் வழிபாடு

### ஐயனாரின் வரலாறு

முன்னொரு காலத்தில் திருமால் முதலிய தேவர்களும், அசுரர்களும் அமுதம்பெற வேண்டிச் சிவபெருமான் திருவருளால் திருப்பாற்கடலைக் கடைந்தனர். திருப்பாற்கடலில் அமுதகலசம் தோன்றிற்று. அதைக்கண்ட தேவர்களும் அசுரர்களும் தனித்தனியே ''இது எங்கள் முயற்சியால் வந்தது ஆதலால் எங்களுக்கே உரியது'' என்றுகூறித் தங்களுக்குள் சண்டையிட முற்பட்டனர். அதனைக் கண்ட திருமால் பிணக்கை ஒழிக்கவும், தேவர்களே சாவா மருந்தாகிய அமுதத்தை உண்டு இறவாமல் வாழவும் விரும்பி மூவுலகத்தாரும் மையல்கொள்ளும் மோகினி வடிவத்தை எடுத்தார். அம் மோகினியின் அழகைக் கண்ட அவுணர்கள், அமுதத்தைப் பெறவிரும்பும் முயற்சியைக் கைவிட்டு ஆசைமேலிட்டுக்கொண்டு மோகினியைச் சுற்றிவர முற்பட்டனர்.

மோகினி வடிவம் கொண்ட திருமால் தன்னைச் சுற்றிவரும் அசுரர்களை நோக்கி உங்களுக்குள் சிறந்த வீரன் எவனோ அவனே என்னை அடைதற்கு உரியவன் என்றார். அசுரர்கள் அனைவரும் நானே வலியவன், நானே வீரன் என்று கூறித் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு இறந்தனர். இராகு கேதுக்களாகிய அசுரர் இருவர்மட்டும் தேவர்களோடு கூடிக் கள்ளத்தனமாக அமுதமுண்டு திருமாலால் தலை துணிக்கப்பட்டுக் கரும்பாம்பும் செம்பாம்புமாகி, அமுதமுண்ட மகிமையால் ஒன்பது கிரகங்களில் இருவராக எண்ணப்படும் பெருமையைப் பெற்றனர்.



## சிவபிரானும் மோகினியும்

தேவர்களுக்கு அமுதமளித்தபின் திருமால் மோகினி வடிவோடு திருப்பாற்கடலின் கரையில் அமர்ந்திருந்தார். சிவபெருமான் தமது நால்வகைச் சக்திகளில் திருமாலும் ஒருவர் என்பதை அறிவித்தருளும் பொருட்டு அழகிய திருவுருவோடு அங்கு வந்தார். மோகினியைக் கண்டு காதல்கொண்டார். மோகினியும் சிவபிரானிடம் காதல் கொண்டார். சிவபெருமான் மோகினியைத் தழுவ வந்தார். அப்போது திருமால், நான் ஆடவன்; அடியேனைத் தாங்கள் வந்து கூடுதல் முறையோ என்று கூறினார். பெருமான் திருமாலை நோக்கி ''நமது சக்தி நான்கு வகையான பெயர்களோடு இலங்குவாள். எனக்கு மனைவியாகும்போது பவானி என்றும், கோபம்கொண்டபோது, காளி என்றும், போர்செய்யும்போது துர்க்கை என்றும், ஆணுருவடையும்போது திருமால் என்று பெயர்பெறுவாள். ஆதலின் நீ எமக்குச் சக்தியேயாவாய்'' என்று கூறினார். நாம் முன்பு தாருகாவனத்திற்குப் பிக்ஷாடனராய்ச் சென்றபோது நீயும் மோகினி வடிவந்தாங்கி வந்து நம்மைக்கூடிப் பிரமனைப் பெற்றாயல்லவா? இன்றும் அதுபோல் உன்னைக்கூட வந்துள்ளோம் என்றுகூறி மோகினியின் கரத்தைப் பற்றினார். மோகினியும் உடன்பட்டார். நாவலந்தீவில் தேங்கு மரத்தடியில் இருவரும் கூடி இன்புற்றனர்.

## ஹரிகர புத்திரர்

சிவபெருமானும் திருமாலும் இவ்வாறு கூடிய காலத்தில் கருங்கடல் போன்ற மேனியும், செவ்வானம் போன்ற சடையும், செண்டாயுதம் ஏந்திய திருக்கரமும், போற்றுதற்குரிய வீரமும் கொண்டவராய் ஞானியர் போற்றும் பெருமையும் நன்மையே புரியும் கருணையும் உடைய ஐயனார் திருவவதாரம் செய்தார். சிவபெருமான் அவருக்கு ஹரிஹர புத்திரர் எனத் திருப்பெயர் சூட்டினார். பல வரங்களையும் தந்தார். உருத்திரர்களுள் ஒருவராக்கினார். ஒரு புவனத்தைக் கொடுத்து, தேவர்களும் முனிவர்களும் வணங்கும் தலைமையை அளித்து அவரைப் புவனத் தலைவராக்கினார். உலகங்கள் அனைத்தையும் காத்துக்கொண்டிருக்கும் பெருவரம் அளித்தார்.

''மைக்க ருங்கடல் மேனியும் வானுலாம்
செக்கர் வேணியும் செண்டுறு கையுமாய்
உக்கி ரத்துடன் ஓர்மகன் சேர்தலும்
முக்கண் எந்தை முயக்கினை நீங்கினன்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்த குந்திரு மைந்தர்க்கு அரிகர
புத்தி ரன்எனும் நாமம் புனைந்துபின்
ஒத்த பான்மை உருத்திரர் தம்மொடும்
வைத்து மிக்க வரம்பல நல்கியே

புவனம் ஈந்து புவனத் திறையென
அவனை நல்கி அமரரும் மாதவர்
எவரும் ஏத்திடும் ஏற்றமும் நல்கினன்
சிவனது இன்னருள் செப்புதற் பாலதோ.

ஐயனர் சிவகுமாரர்களில் விநாயகர், முருகன் ஆகியோரின் இளவலாகும் பெருமையைப் பெற்று, சிவபெருமான் ஆணைப்படி, தம் கடமைகளைச் செய்துகொண்டு விளங்கி வருகின்ருர் என்பது கந்தபுராணத்தில் காணப்படும் ஐயனர் திருவவதார வரலாருகும்.

## பாத்ம புராணத்தில்

பஸ்மாசுரன் என்பவன் சிவபெருமானைக் குறித்துத் தவம்செய்து யார்தலையில் கைவைக்கின்றேனே அவர் உடனே பஸ்மமாக வேண்டும் என்ற வரத்தைப் பெற்ருன். தான் பெற்ற வரம் சரியானதுதானு என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பிய பஸ்மாசுரன் வரமளித்த சிவபெருமான் தலையிலேயே கைவைக்க ஓடினன், சிவபெருமான் அஞ்சியதுபோல மறைந்தார். ஐவேலிக்காய் என்ற சிவலிங்கக் காயில் மறைந்திருந்தார் என்றும் சிலர் கூறுவர்.

வரம்பெற்ற பஸ்மாசுரன் உலகையே அழிக்க முற்பட்டான். திருமால் பஸ்மாசுரனின் செய்கையை அறிந்தார். மோகினி வடிவோடு சென்று அவனை அணுகினர். பஸ்மாசுரன் மோகினியிடம் மயங்கினன். தான் பெற்ற பெருவரத்தை மோகினியிடம் தெரிவித்தான். திருமால் பஸ்மாசுரனை நோக்கி, வரம்பெற்ருல் மட்டும் போதுமா? வரத்தைப் பயன்படுத்துவதற்கு உரிய மந்திரத்தைச் சொல்லுமுன் கரநியாசம் அங்கநியாசம் செய்யவேண்டாமா? என்ருர். பஸ்மாசுரனும் அவ்வாறே அங்கநியாசம் செய்யமுற்பட்டு, "சிரசே சுவாகா" என்று கூறித் தன் கையைத் தானே தன்தலையில் வைத்துக்கொண்டு பஸ்மமானன். மோகினி தன்னை அடையவேண்டுமானல் எண்ணெய் தேய்த்துக் குளித்துவா என்று கூறியதாகவும், பஸ்மாசுரன் தலையில் எண்ணெய் தேய்ப்பதற்காகக் கையை வைக்கும்போது அழிந்ததாகவும் கூறுவது உண்டு. பஸ்மாசுரன் அழிந்தபின் சிவபெருமான் வெளிப்பட்டார்.

1. கந்தபுராணம் – மகா சாத்தாப் படலம்



திருமால் மோகினி அவதாரமெடுத்து அவனை அழித்ததை அறிந்தார். இருவரும் தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அழிக்க மோகினியாகவும், பிக்ஷாடனராகவும் சென்றனர். அப்போது ஐயனர் அவதரித்தார் என்று பாத்மபுராணம் கூறுகிறது.

## இந்திராணியைக் காத்தருளியது

கந்தபுராணத்தில் சூரபத்மனுக்கு அஞ்சிய இந்திரன் தன் மனைவியோடு சீர்காழிக்கு வந்து மூங்கிலாய் மறைந்து தங்கித் தவம்செய்ய முற்பட்டான், சூரபன்மனிடமிருந்து தன் மனைவி இந்திராணியைக் காத்தருளுமாறு ஐயனரை வேண்டினன். ஐயனர் பூதகணங்கள் புடைசூழ வெள்ளை யானையின்மேல் பூரணை, புட்கலை என்னும் இரு பெரும் தேவியரோடு இந்திரனுக்குக் காட்சி தந்தார். இந்திரன் சூரபன்மன் கொடுமையால் தேவர்கள் துயருறுவதையும், அதனைச் சிவபெருமானிடம் தெரிவிக்கத் திருக்கயிலை செல்வதையும் கூறித் தான் கயிலை சென்று திரும்பி வரும்வரை இந்திராணியை அடைக்கலமாக ஏற்றுக் காப்பாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். ஐயனரும் அதற்கிசைந்து தனது வீரருள் மகாகாளர் என்பவரை இந்திராணிக்குக் காவலாக இருக்குமாறு கூறி மறைந்தார்.

சூரபன்மனின் தங்கை அஜமுகி என்பாள் அங்கு வந்து இந்திராணி தவம்புரிவதைக் கண்டு அவளைத் தூக்கிக்கொண்டுபோய்த் தன் தமையன் சூரபத்மனுக்கு அளிக்க விரும்பினள். முடிவில் இந்திராணியை அழைத்தாள். அவள் மறுக்கவே அவளை அஜமுகி தன்கையால் பிடித்து இழுத்தாள். அஞ்சி நடுங்கிய இந்திராணி,

பையரா அமளி யானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே! ஓலம்; விண்ணேர்க்கு ஆதியே! ஓலம்; செண்டார்
கையனே! ஓலம்; எங்கள் கடவுளே! ஓலம்; மெய்யர்
மெய்யனே! ஓலம்; தொல்சீர் வீரனே! ஓலம்; ஓலம்.

ஆரணச் சுருதியோர்கள் அடல்உருத்திரன்என்று ஏத்தும்
காரணக் கடவுள்! ஓலம்; கடல்நிறத்து எந்தாய்! ஓலம்;
பூரணைக்கு இறைவா! ஓலம்; புட்கலை கணவா ஓலம்;
வாரணத்து இறைமேல் கொண்டு வரும்பிரான்! ஓலம். ஓலம்.

என்று ஐயனரை விளித்துத் தன் அபயக்குரலை வெளிப்படுத்திப் பலவாறு கதறினள்.

அபயக் குரல்கேட்ட ஐயனரின் படைத்தலைவர் மகாகாளர் தன் வாட்படையைச் சுழற்றிக்கொண்டு இடிபோல் ஆரவாரித்து வெளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டார். அஜமுகியைத் தடுத்தார். அவர் வார்த்தையைக் கேட்க மறுத்த அஜமுகி முத்தலைச் சூலத்தையும் மலையையும் அவர்மீது எறிந்தாள். மகாகாளர் அவற்றைப் பொடிப்படுத்தித் தன் ஆணையைக் கேளாது இந்திராணியைத் தீண்டிய அஜமுகியின் கையை வெட்டினார், காலால் அவளை இடறி ஓட்டினார். இந்திராணியைக் காத்த ஐயனார் கோயில் சீகாழியில் தென்பாதித் தெருவில் உள்ளது. இவ்விடத்திற்குக் கைவிடான்சேரி என்று இப்போது பெயர் வழங்கிவருகிறது.

சூரபத்மனுக்குப் பயந்த இந்திரன் கோமுத்தீசுரம் என்னும் திருவாவடுதுறைத் தலத்தில் தங்கித் தவம்புரிந்தான். அஜமுகி இந்திரனைக் கண்டு காதல்கொண்டு அவனைப் பலவந்தமாக அணைய முற்பட்டாள். அதன்காரணமாகக் கருவுற்ற அஜமுகி கிருத்தியா என்ற பெண்குழந்தையைப் பெற்றாள். கிருத்தியை கண்ணிற்கண்ட பொருள்களையெல்லாம் வாரிவிழுங்கி நாசமாக்க முற்பட்டாள். ஐயனார் சிவபெருமான் ஆணைப்படி அவளைக் கடலில் எறிந்து உலகைக் காத்தருளினார்.

## திருவுலா வெளியிட்ட திருப்பிடவூர் ஐயனார்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனாரோடு திருவஞ்சைக்களத்தில் தங்கியிருந்தபோது ஒருநாள் அஞ்சைக்களத்து இறைவனை வேண்டி இவ்வுலக வாழ்வுபோதும் என்னை ஏற்றருள் என்ற குறிப்புடைய திருப்பதிகம் பாடி வழிபட்டார். பெருமான், இந்திரன், மால், பிரமன் முதலிய தேவர்களை அனுப்பிச் சுந்தரரை வெள்ளையானை மீது ஏற்றித் திருக்கயிலைக்கு அழைத்து வருமாறு கட்டளையிட்டார். சிவபிரான் அருளியவாறு தேவர்கள் திருவஞ்சைக்களம் வந்து சுந்தரரை வெள்ளையானை மீது ஏற்றித் திருக்கயிலாயத்திற்கு அழைத்துச் சென்றனர். சுந்தரர் சேரமான் பெருமாளை மனதில் நினைத்துக் கொண்டே கயிலை சென்றார். சுந்தரர் கயிலை செல்வதை அறிந்த சேரமான் பெருமாளும் ஒரு குதிரையைக் கொண்டுவரச் செய்து அதன் காதில் திருவைந்தெழுத்தை ஓதி அக்குதிரை மீது ஏறிச் சுந்தரரை வலம்வந்து வான்வழியே கயிலை சென்றார். சுந்தரர் திருக்கயிலாயம் சென்று இறைவனை வணங்கினார். சேரமான்பெருமாள் தன்னோடு உடன் வந்திருப்பதை விண்ணப்பித்தார். இறைவன் நந்தி தேவரிடம் சேரர் கோவை உள்ளே அழைத்து வரக் கட்டளையிட்டார். உள்ளே வந்த சேரர் காவலரைச் சிவபிரான் இங்கு நாம் அழையாமல் வந்தது ஏன் என வினவினார். சேரமான் பெருமாள் சுந்தரரைப் போற்றி வந்தேன் என்று கூறித் தாம் பாடியருளிய திருக்கயிலாய ஞான உலாவைப் பாடி வணங்கினார். சிவபிரான் அதனைக்கேட்டு மகிழ்ந்து அவரைச் சிவகணத் தலைவராக இருக்குமாறு அருள்பாலித்தார். திருக்கயிலையில் சேரமான் பாடியருளிய திருக்கயிலாய ஞான உலாவை அங்கிருந்து கேட்ட ஐய



னார் தென்னாட்டில் திருப்பிடவூருக்குக் கொண்டுவந்து தமிழக மக்கள் அறிந்துய்யுமாறு வெளிப்படுத்தினார். இது பெரியபுராணத்தில் காணப்படும் ஐயனாரின் அருளிச் செயலாகும்.

திருப்பிடவூர் திருச்சிராப்பள்ளியிலிருந்து பெரம்பலூர் செல்லும் வழியிலுள்ளது. இங்குள்ள ஐயனார் கையில் திருக்கயிலாய ஞான உலா உள்ளது. இவ்வையனாரை மக்கள் அரங்கேற்றிய ஐயனார் என அழைக்கின்றனர்.

## ஐயனார் பற்றிய சில கதைகள்

கி. பி. 16-ம் நூற்றாண்டில் நரசிம்ம பூபாலன் என்ற சோழ மன்னன் ஒருவன் அரசுவகித்தான். அவனது அவைக்களப் புலவராக அப்பய்யதீக்ஷிதரும், வேறொரு புலவரும் விளங்கினர். இருபெரும் புலவர்களோடு மன்னன் ஐயனார் கோவிலுக்குச் சென்றான். அக்கோயிலில் ஐயனார் மூக்கில் விரலைவைத்த நிலையில் காணப்பட்டார். அதற்கான காரணத்தை மன்னன் அருகில் உள்ளவர்களைக் கேட்டான். அவர்கள், ‘‘இங்கு ஒரு ஞானி’’ வருவார். அவர் அரசனுடைய வேண்டுகோளின்படி காரணம் கூறுவார். உண்மைக்காரணத்தைக் கேட்டவுடன் சாஸ்தாதன் மூக்கிலிருந்து கைவிரலை எடுத்துவிடுவார்’’ என்று எங்கள் மூதாதையர் கூறியுள்ளனர் எனத் தெரிவித்தனர். அரசன் உடனே அருகில் இருந்த ஒரு புலவரைப் பார்த்துக் காரணம் கூறுமாறு கேட்டான். அதற்கு அப்புலவர் பின்வரும் பொருளமைந்த பாடலொன்றைப் பாடினர். ‘‘நான் திருமாலின் புதல்வனாகவும், சிவகுமாரனாகவும், இருக்கிறேன். பிரம்மனுக்கு நான் சமமானவன். பூதகணங்கள் என்னைச் சூழ்ந்துள்ளன!’’ என்று ஐயனார் சிந்திப்பதாகக் கவிபாடினார் அப்புலவர். சாஸ்தா மூக்கிலிருந்து கைவிரலை எடுக்கவில்லை.

அரசன் அப்பய்ய தீக்ஷிதரைப் பார்த்துக் கவிபாடும்படி கேட்டுக் கொண்டான். அப்பய்ய தீக்ஷிதர் பின்வரும் பொருளமைந்த பாடலைப் பாடினார். ‘‘நான் பார்வதியையும், திருமாலையும் அம்மா என்று அழைப்பேன்; சிவனைத் தந்தை என்று அழைப்பேன். திருமகளை என்ன முறைகூறி அழைப்பது என்று தோன்றவில்லையே என ஐயனார் சிந்தனை செய்கிறார்’’ என்ற பொருளமைந்த செய்யுளைப் பாடினார். அக்கவிதையைக் கேட்டவுடன் ஐயனார் மூக்கிலிருந்து கைவிரலை எடுத்துவிட்டார். அரசனும், ஏனையோரும் அப்பய்யதீக்ஷிதரின் கவித்திறனைப் பாராட்டினர் என்று தீக்ஷிதேந்திர நூல் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புஷ்கலை - பூரணை திருமணம்

ஐயனாரின் இடதுபுறமிருக்கும் அம்பிகை புஷ்கலை, இவ்வம்பிகை கரிய திருமேனி உடையவள். வலது கையில் மலரையும், இடது கையில் வரமுத்திரையையும் தரித்தவள். இடது காலைத் தொங்கவிட்டும், வலது காலை மடக்கியும் இருப்பவள்.

## புஷ்கலையை ஐயனார் மணந்த வரலாறு

நேபாள நாட்டில் பலஞன் என்றொரு மன்னன் இருந்தான். அவன் மந்திர தந்திரங்களில் வல்லவன். காளி தேவியிடம் பக்தி கொண்டவன், காளிதேவிக்கு ஒரு கன்னியை அர்ப்பணித்தால் மூப்பின்றி வாழலாம் என்று சிலர் கூறக்கேட்டு ஒரு பெண்ணைக் காளி கோயிலுக்குக் கொண்டு சென்றான். அம்மன்னன் கொண்டுவந்த பெண் சிவபக்தி பூண்டவள். தனக்கு வரும் இடையூற்றிலிருந்து காத்தருளுமாறு சிவபெருமானை வேண்டினாள். சிவபெருமான் ஐயனாரை அனுப்பி அப்பெண்ணைக் காக்குமாறு செய்தார். பலஞன் ஐயனாரின் பேரழகில் ஈடுபட்டு அவரைத் தன்மருமகனாக அடையவிரும்பினான். தன் மகள் புஷ்கலையை மணம்புரிந்து கொள்ளுமாறு வேண்டினான். ஐயனாரும் அதற்கிசைந்து புஷ்கலையை மணந்து புஷ்கலாபதி என்ற பெயரைப் பெற்றார்.

பூரணை ஐயனாரின் வலதுபுறமிருக்கும் அம்பிகை. இவள் பொன்னிறம் கொண்டவள். இடதுகையில் குவளை மலரை ஏந்தியவள்; வலது கையைத் தொங்கவிட்டிருப்பாள். இடதுகாலை மடக்கியும் வலது காலைத் தொங்கவிட்டுமிருப்பவள்.

## பூரணையை ஐயனார் மணந்த வரலாறு

வஞ்சி மாநகரில் பிஞ்ஞகன் என்றொரு மன்னன் இருந்தான். அவன் ஒருநாள் காட்டிற்குள் வேட்டையாடச் சென்றான். இரவு நேரம். மன்னனுக்குத் திசை தெரியவில்லை. இரவில் பூதகணங்கள் கானகம் வந்தன. அரசனைக் கண்டு அவனைக் கொல்வதற்கு நெருங்கி வந்தன. பிஞ்ஞகன் ஐயனாரை வேண்டினான். ஐயனார் மன்னன்முன் தோன்றினார். பூதங்கள் அஞ்சி ஓடின. ஐயனாரின் அழகில் ஈடுபட்ட பிஞ்ஞகன் தன் புதல்வியை மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டினான். ஐயனாரும் அதற்கு இசைந்து பூரணையை மணந்து பூரணாதிபதியானார்.

பூரணை, புஷ்கலை இருவரும் சத்தியபூரணர் என்ற முனிவரின் புதல்விகள் என்றும், சௌகந்திகன், அம்பாலிகன் ஆகியோரின் புதல்விகள் என்றும் அவர்கள் தவம்செய்து ஐயனாரால் மணம்புரிந்து கொள்ளப் பெற்றனர் என்றும் கூறப்படுவதுண்டு.



## ஐயப்பன் வரலாறு

வஞ்சி நாட்டில் ஐயனார் பூரணையை மணந்து வாழ்ந்து வருவதை அறிந்த நேபாள மன்னன் பலஞன் தன்மகளை விடுத்து ஐயனார் பூரணையுடன் வாழ்வதைக் கண்டு வேதனையடைந்து ஐயனாரை நோக்கி "மனிதனாகப் பிறந்து பன்னிரண்டு ஆண்டுகள் பிரமசாரியாக வாழ்வாயாக" என்று சபித்தான். ஐயனாரும் நாம் நிலவுலகில் தோன்றுவதற்கு இது ஒரு காரணமாயிற்று என்று கூறியும், அந்த நேபாள மன்னனை நோக்கி, "கேரளத்தில் பந்தன தேசத்தில் நீயே மன்னனாய்ப் பிறப்பாய், அங்கே நான் குழந்தையாக உம்மிடம் வந்து பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்வோம்" என்று கூறி மறைந்தார்.

கேரள நாட்டில் பந்தளம் என்ற பகுதிக்கு அரசனாகப் பாண்டிய மன்னன் பரம்பரையில் இராசசேகரன் என்ற பெயருடன் பிறந்து அரசு புரிந்தான் பலஞன். திருமணம் ஆகிப் பல்லாண்டுகளாகியும் புத்திரப்பேறு வாய்க்காமையினால் மனவேதனை அடைந்த அம்மன்னன் சிவபெருமானை வேண்டிப் பணிந்தான். சிவபெருமான் திருவருளால் ஐயனார் அம்மன்னனின் குழந்தையாக வரத் திருவுளம் கொண்டார்.

ஒருநாள் காட்டில் வேட்டையாடச் சென்ற மன்னன் குழந்தையொன்று அழுதுகொண்டிருப்பதைக் கண்டு அதனருகில் சென்றான். ஒளியும், தண்மையும் உடைய அக்குழந்தையின் முகத்தைக் கண்டு வியந்தான். சிவபெருமான் அந்தணர் உருவில் வந்து அரசனை நோக்கி, "மன்னா! இக்குழந்தை தெய்வாம்சம் பொருந்தியது. இதனைத் தெய்வம் உனக்கு அளித்திருக்கிறது. எடுத்துச்சென்று வளர்த்து வா. இக்குழந்தையின் பெருமைகளை விரைவில் நீ உணர்வாய்!" என்று கூறி மறைந்தார். மன்னன் மகிழ்ச்சிக்கடலில் திளைத்தவனாய் குழந்தையை அரண்மனைக்கு எடுத்துச்சென்று அரசியிடம் கொடுத்து மணிகண்டன் எனப் பெயர்சூட்டி அன்போடு வளர்த்துவந்தான்.

## குருதக்ஷிணை

மன்னன் மணிகண்டனைக் குருகுலத்தில் சேர்த்துக் கல்வி பயிலுமாறு செய்தான். ஓதாமலே எல்லாவற்றையும் உணர்ந்த மணிகண்டனைப் பார்த்துக் குரு வியந்தார். மணிகண்டன் கடவுள்தன்மை பொருந்தியவன் என்று உணர்ந்த குரு, ஊமையும் குருடனுமாயிருக்கும் தன் மகனைக் குறையற்றவனாகச் செய்தருளுமாறு மணிகண்டனை வேண்டினார். மணிகண்டன் குருவின் மகனுக்கு இருந்த குருட்டுத் தன்மையையும், ஊமைத் தன்மையையும் ஒழித்து, அவனை நிறைந்த ஞானமும் உடல்நலமும் உடையவனாகச் செய்தருளினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவிழந்த அரசி

மணிகண்டனை மகனாக அடைந்தபின் மன்னன் மனைவி ஒரு ஆண் மகவைப் பெற்றிருந்தாள். அரசனும் அக்குழந்தைக்கு இராஜராஜன் எனப் பெயரிட்டான். மணிகண்டர் தம் இளவல் இராஜனோடு கூடி விளையாடி மகிழ்ந்திருந்தார்.

மன்னனின் அமைச்சன் மணிகண்டனின் பேராற்றலை உணர்ந்து, "இவர் அரசரானால் நமக்குப் பெருமை இருக்காது" என்று நினைத்து எப்படியாவது மணிகண்டரை நாட்டைவிட்டு விரட்டிவிட்டு இராஜராஜனை அரசனாக்கவேண்டுமென்று திட்டமிட்டான். மணிகண்டனிடம் அளவற்ற அன்பைப் பொழியும் மன்னனிடமிருந்து மணிகண்டனை எவ்வாறு பிரிப்பது என்று ஆராய்ந்து முடிவில் அரசியிடம் சென்றான். அவளிடம், "மன்னன் மணிகண்டனையே அரசனாக்குவான் போலத்தெரிகிறது. அரச பரம்பரையில் வந்த தங்கள் புதல்வன் இந்நாட்டு மன்னனாக ஆவதற்கு ஆவன செய்யுங்கள்" என்று கூறினான். அரசி, "அதற்கு வழி யாது?" எனக் கேட்டாள். அமைச்சன் அரசிக்கு ஒரு உபாயம் சொல்லிக்கொடுத்தான். "தாங்கள் தாங்கமுடியாத தலைவலியால் தவிப்பவர் போல் நடிக்கவேண்டும்! என்னுடைய தூண்டுதலால், புலிப்பால் கொண்டுவந்து தடவினால்தான் தலைவலி தீரும் என்று மருத்துவர் கூறுவார். அதனைக் கேட்ட மணிகண்டன் தானே புலிப்பால் கொண்டுவந்து தருவதாகக் கூறிப் புறப்பட்டுப் போவான், புலியிடம் அகப்பட்டு இறப்பான்." என்று தீயவழி கூறினான் அமைச்சன். மந்தரையின் வார்த்தையினால் மனம்மாறிய கைகேயிபோல மந்திரியின் சூழ்ச்சிக்குப் பலியானாள் அரசி. அமைச்சன் கூறியவாறே தலைவலி வந்ததுபோல நடித்தாள். "மருத்துவர், இந்நோய் புலிப்பால் இன்றித் தீராது" என்றனர். மணிகண்டர், "நான் புலிப்பால் கொண்டுவருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டார்; கானகம் நோக்கிச் சென்றார்.

## மகிஷி வதம்

தனு என்ற அரசனுக்கு ரம்பன், கரம்பன் என்று இரு புதல்வர்கள் இருந்தனர். ரம்பனுடைய மகன் மகிடாசுரன் துர்க்கையால் கொல்லப்பட்டான். கரம்பனுக்கு மகிஷி என்ற பெயருடைய அரக்கப் பெண்ணொருத்தி இருந்தாள். மகிஷி பிரம்மனைக் குறித்துத் தவம் செய்து வரம்பல பெற்று தேவருலகம் சென்று அரசுபெற்று, தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் இடையூறுகள் பல விளைவித்துவந்தாள்.

ஐயனார் மணிகண்டராகக் கானகம் வருவதை ஞானக் கண்களால் அறிந்த இந்திரன் முதலான தேவர்களும், முனிவர்களும் கானகம் வந்தனர். அவரை அழைத்துக்கொண்டு மேற்கு மலைத்தொடரில் பொன்னம்பலமேடு என்னும் இடத்திற்குச் சென்றனர். காந்தமலை எனப்படும் அம்மலையில் பொன்னம்பலத்தில் சிம்மாசனத்தில் மணிகண்டரை எழுந்தருளச் செய்து, தங்களுக்கு மகிஷி என்ற அரக்கியால் ஏற்பட்ட துன்பங்களைக் கூறி, மகிஷியை அழித்துத் தங்களைக் காத்தருளுமாறு மணிகண்டரை வேண்டினர். மணிகண்டர் உடனே தெய்வலோகம் சென்றார். மகிஷியுடன் போரிட்டு வென்று அவளைக் கொன்று தேவர்களைக் காத்தருளினார்.



## புலிவாகனர்

மகிஷியைக் கொன்றபின் மணிகண்டர் காந்தமலை வந்து அமர்ந்து தன் தாய் புலிப்பால் கேட்டதை இந்திரனிடம் கூறினார். இந்திரன் புலியானான். மணிகண்டர் அதன்மீது ஏறி அமர்ந்தார். ஏனைய தேவர்கள் பெண்புலிகளாய் உடன் வந்தனர்.

புலிமீது ஏறிப் புலிக்குழாத்துடன் வரும் மணிகண்டரைக் கண்டு நகரமக்கள் அஞ்சி ஓடினர். அமைச்சன் மயக்கமுற்றான். அன்னையும் அடாது செய்ததை எண்ணி வருந்தினாள். தந்தை, மணிகண்டனை வாரித்தழுவினார். மணிகண்டன் அமைச்சரைத் தெளியவைத்து, தாயைத் தேற்றி, "அன்னையே எனக்கு அரசாளும் விருப்பம் இல்லை இராஜராஜனுக்குப் பட்டம் சூட்டி நாட்டை அரசாளச் செய்யுங்கள். உலகநலம் கருதி பன்னிரண்டு ஆண்டுகள் உங்கள் பிள்ளையாய் வளர்ந்தேன். நான் வந்த காரியம் முடிந்தது. போய்வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டார். மன்னனை நோக்கி, " சபரிமலை " யில் சரங்குத்திய இடத்தில் தனக்கு ஓர் ஆலயம் அமைக்குமாறு கூறி விடைபெற்றுக் காந்தமலை சென்றார்.

## சபரிமலையில் சாஸ்தா கோயில்

மணிகண்டரின் பிரிவாற்றாது மன்னன் இராஜசேகரன் மனம்வருந்தினான். கும்பமுனி அம்மன்னனின் வருத்தத்தை மாற்றி ஆறுதல் கூறினார். சிலநாட்கள் சென்றபின் மன்னன் தன் படையோடு சபரிமலை சென்றான். அங்கு சரங்குத்திய மரத்தைக் கண்டு, அவ்விடத்தில் கோயிலைக் கட்டத் தீர்மானித்தான். இரவுப்பொழுது வந்தது. உறங்கிய மன்னனை ஒரு பூதம் தூக்கிச்சென்று காந்தமலையில் இருந்த ஐயப்பரிடம் விட்டது. மன்னன் காந்தமலையிலுள்ள, பொற்கோயிலில் தேவர்கள் புடைசூழ வீற்றிருப்பதைக் கண்டான். மணிகண்டர் மன்னனை வரவேற்று உபசரித்தார். சபரிமலையில் தான் அமர்ந்துள்ள ஐயனார் கோலத்தில் ஒரு கோயில் கட்டுமாறு கூறினார். "இடையூறுகள் வரின், பயன்படுத்துக" என்று ஒரு கத்தியையும் வழங்கி அனுப்பினார். மன்னன் சபரிமலையில் சிறந்த சிற்பிகளைக் கொண்டு, கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்ட முற்பட்டான். இந்திரன், தானே அக்கோயிலைக் கட்டவேண்டும் என்று மன்னனைத் தடுத்தான். இருவருக்கும் போர் மூண்டது. மன்னன் மணிகண்டர் தந்த கத்தியால் இந்திரனோடு போரிட்டான். முடிவில் இந்திரன் மன்னனைச் சரண் அடைந்தான். மன்னனும், இந்திரனும் விசுவகர்மாவின் துணையோடு பதினெட்டுப் படிகளுடன் கூடிய சபரிமலைக் கோயிலைக் கட்டினர். சாஸ்தாவின் திருவுருவைப் பரசுராமர், அகத்தியர், தேவர், முனிவர் முதலியோர் துணையுடன் வழிபட்டனர், மன்னன் பிரதிஷ்டை செய்தான்.

சின்முத்திரையோடு கூடிய வலக்கரமும், முழங்காலின்மீது நீட்டிய இடக்கரமும் கொண்டவராய்க் குந்தி அமர்ந்த கோலத்தில் சாஸ்தாவைப் பிரதிஷ்டை செய்தான் மன்னன். அன்றுமுதல் இன்றுவரை சபரிமலை சாஸ்தா பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் அன்புத் தெய்வமாய் விளங்கி அருள்புரிந்து வருகிறார்.

## ஐயனாரின் பெயர்களும் அவைதரும் விளக்கங்களும்

ஐயன்—ஐயனார்— வணங்கத்தக்கவன்;

காரி—கரிய நிறம் படைத்தவன்;

கடல்நிறவண்ணன்—நீல நிறமுடையவன்.

சாத்தா—துட்டரைத் தண்டிப்பவன்.

பூரணை கேள்வன்—பூரணை என்றால் நிறைந்த சத்தியை இது குறிக்கும். உயிர் இனங்களுக்குத் தலைவன் பூரணை மணாளன் என்பதாகும். புட்கலை மணாளன் — புட்கலம் என்றால் தேகம். பிருதிவி மயமான தேகமுடைய சத்திக்கு மணவாளன்.


யோகி—யோகத்தை அறிந்தவன்; நிர்மல சத்துவ பரிணாம ரூபமாகிய சித்த விருத்திகளை அந்தர்முகமாக்கிக் காரிய ரூபமான தேகத்தைக் காரணமான உயிரில் ஒடுக்கும் ஆற்றல் பெற்றவன்.

மாசாத்தான்—மகா அனுக்கிரகமுடையவன்; துட்டர்களையும் தவறு செய்பவர்களையும் தண்டிப்பவன்.

செண்டாயுதன்—செண்டு என்பது குதிரையை யோட்டுஞ் சவுக்கின் பெயர். தேகத்தினுள்ள உயிர் இயக்கத்தைக் குதிரையாகக் கூறுவது யோக மரபு, பிராண சத்தியே குதிரையாகும். அதை முறைப்படுத்திச் செலுத்தச் செண்டைக் கையில் ஏந்தியவர் என்பது கருத்தாகும். செண்டு என்பது குதிரைச் சவுக்காகும் என்பதை திருவாதவூர் அடிகள் புராணத்துக் குதிரைத் தலைவனாக வந்த சிவபரஞ்சுடர் பாண்டியன் கொடுத்த பரிசுப் பொருளைச் செண்டால் ஏற்றான் என்பதினாலும் விளங்கும்.



கோயில் முகப்புத் தோற்றம்



மூலஸ்தான மூர்த்தியின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஆரியன்—பூசிக்கத்தக்கவன்—குரு.
அறத்தைக் காப்போன்—தருமத்தை நிலைநிறுத்துவோன்.
அரிகர குமரன்—அரிக்கும் அரனுக்கும் தோன்றியவன்.
சேவகனுர்—சிவ சந்நிதியில் சேவகஞ்செய்பவர்.

ஐயனுருக்கு சாஸ்தா, கையனுர், சாதவாகனன், கோழிக்கொடியோன், சாத்தான், வெள்ளையானை வாகனன் என்ற பெயர்கள் உண்டு.

## இலங்கையில் ஐயனுர் வழிபாடு

இலங்கையில் பல ஊர்களிலும் ஐயனுர் கோயில்கள் அமைந்திருப்பதைக் காணக்கூடியதாயிருக்கின்றது. ஐயனுரை மக்கள் கிராமதேவதையாகப் போற்றி வழிபட்டு வருகின்றனர். சிவபெருமானுடைய கோயிலை ஊர்நடுவே அமைத்து, ஊரின் நான்கு புறங்களிலும் ஊர்க் காவல் தெய்வங்களாக மாரியம்மன், பிடாரி, ஐயனுர், காளி முதலிய தெய்வங்களை எழுந்தருளச் செய்து மக்கள் வழிபட்டு வருகின்றனர். இலங்கையிலே ஐயனுர் வழிபாடானது போத்துக்கீசர் ஆட்சிக்கு முற்பட்ட காலத்திலேயே ஆரம்பமானது எனக் கூறக்கூடியதாயிருக்கின்றது. என்றாலும் இவ்விடயம் ஆராய்ச்சிக்குரிய ஒன்றாக இருக்கின்றது.

ஐயனுர் கோயிலானது இலங்கையிலே பல பாகங்களிலும் அமைந்திருக்கின்றன. அவற்றில் சில கோயில்களின் பெயர்கள் வருமாறு:- ஐயனுர் கோயில்-நெடுந்தீவு மேற்கு, உயரப்புலம், ஐயனுர் கோயில்-தெல்லிப்பழை கரண்டகக் குளம், ஐயனுர் கோயில்-அனலைதீவு, ஐயனுர் கோயில்-சுன்னுகம், ஐயனுர் கோயில்-உடப்பு, கோவிற்பதி ஐயனுர் கோவில்-சண்டிலிப்பாய், துண்டி மகாமாரி அம்பாள் ஐயனுர்-கொழும்புத்துறை கிழக்கு யாழ்ப்பாணம், ஐயனுர் கோவில்-வட்டுக்கோட்டை மேற்கு, வியாவில் ஐயனுர்-ஈழத்துச் சிதம்பரம் காரைநகர், ஐயனுர் கோவில்-மண்டைதீவு, ஐயனுர் கோயில்-சரவணை கிழக்கு மயிலைப்புலம், ஐயனுர் கோயில்-வண் வடமேற்கு யாழ்ப்பாணம், ஐயனுர் கோவில்-சுருவில், ஐயனுர் கோயில்-மண்டூர், ஐயனுர் கோயில்-செங்கலடி, ஐயனுர் (சபரி ஐயப்பன்)- குருக்கள் மடம், ஐயனுர் கோயில்-கல்முனை, ஐயனுர் கோயில்-புதுக்காடு இராமநாதபுரம், ஐயனுர் கோயில்-பாண்டிருப்பு, ஐயனுர் கோயில்-நயினுதீவு என்பனவாகும்.

## கோயில் வரலாறு


இலங்கைத்தீவின் வடபால் பலவளங்களும் மலிந்து நிறைந்து சிரோரத்தினமாய் விளங்கும் வண்ணையம்பதியிலே திவ்விய க்ஷேத்திரத்தில் அடியார்களின் தியானுதிகட்கு தாம் அகப்பட வேண்டுமென்னும் திருவருளினுலே திருவுருவத் திருமேனிகொண்டு வீற்றிருக்கின்ற ஸ்ரீ பூரணம்பா புட்கலாம்பா சமேத ஹரிஹர புத்திரராகிய ஐயப்ப சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். எல்லா உலகங்களையும் தனது பெரும் கருணையினாலே அணைத்து ஆதரித்து அருண்மழை பொழிகின்ற அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகராக விளங்குகின்ற ஐயனாரை இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்துவந்த பெருமக்கள், யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமேற்குப் பகுதியிலே அமைந்துள்ள வண்ணார்பண்ணையம்பதியிலேயுள்ள வில்வமரத்தின் கீழ் ஸ்தாபித்து, வழிபாடுசெய்து வந்திருக்கிறார்கள். இவ் ஐயனார் கோயிலானது ஒல்லாந்தர் காலப் பகுதியிலே கட்டப்பெற்றதாகும். அக்காலந்தொட்டு ஐயனார் இக் கிராமத்திலே கோயில்கொண்டு அருள்புரிந்து வருகிறார்.


வண்ணை வத்தீஸ்வரன் கோயிலின் காவற் தெய்வமாக வண்ணை வடமேற்கு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் கோவிலும், அருள்மிகு சர்வ சக்தி ஸ்ரீ மங்கள மகா காளியம்பாள் கோயிலும், பெரியகடையிலமைந்துள்ள கடைத்தெருப் பிள்ளையார் கோயிலும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஐயனார் கோயிலுக்கு தென்மேற்குப் பக்கத்திலே அருள்மிகு சர்வசக்தி ஸ்ரீ மங்கள மகா காளியம்பாள் ஆலயமும், வடமேற்குப் பக்கத்திலே ஸ்ரீ விசுவேசப் பிள்ளையார் கோயிலும், ஸ்ரீ விசுவலிங்க மகாகணபதி கோவிலும், தெற்குப்பக்கத்திலே காட்டுத்துறை ஆனந்தவிநாயகர், பகவதியம்பாள், கருணாகர பைரவகோவிலும், தென்கிழக்குப் பக்கத்திலே ஸ்ரீ சிவயோக முனியப்ப சுவாமி கோயிலும், வடகிழக்குப் பக்கத்திலே வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயமும் அமைந்துள்ளது. இவற்றைக்கொண்டு நோக்குமிடத்து ஐயனார் கோயிலைச் சுற்றிப் பல இந்துக் கோயில்கள் அமைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இக்கோயிலுக்கெல்லாம் நடுவனாக ஐயனார் வீற்றிருந்து அருள் புரிகின்றார் எனலாம்.

ஐயனார் கோயில்தான் வண்ணார்பண்ணையிலுள்ள ஐயனார் கோயிலடிப் பிரதேசத்தில் முதன்முதலில் நிறுவப்பெற்ற ஆலயமாகும். இதனால் இவ்விடம் ''ஐயனார் கோயிலடி'' என அழைக்கப்பெறுகின்றது. இக்கோயிலின் பெயரினாலேதான் இவ்வூருக்கு இப்பெயர் வழங்கப்படலாயிற்று. அத்தோடு இங்கு அமைந்துள்ள சனசமூக நிலையத்திற்கும் ஐயனார் கோயிலடி சனசமூக நிலையம் என்ற பெயர் சூட்டப்பெற்றிருக்கின்றது. இக்கிராம மக்கள் ஐயனாரைத் தமது குலதெய்வமாக பன்னெடுங்காலமாகப் பூசித்து வருகின்றார்கள். அமைதியான இயற்கையெழில் சூழ்ந்த இடத்திலே ஐயனார் கோயில் அமைந்துள்ளது. ஆலயத்திற்கு வடக்குப் பக்கத்திலே ஓர் வில்வ மரம் அமைந்துள்ளது; இம்மரம் இவ்வாலயத்தின் தலவிருட்சமாகும்.



புராதனமான மூலஸ்தான மூர்த்தியின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கி. பி. 1892ம் ஆண்டில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அவர்களால், சைவ சமயக் கோயில்கள், கிறிஸ்தவக் கோயில்கள் பற்றிய பதிவு இடாப்பு தயார்செய்யப் பெற்றபொழுது, அதில் ஸ்ரீ பூரணம்பா புட்கலாம்பா சமேத ஹரிஹர புத்திர ஐயனர் கோயில் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஐயனர் கோயிலானது யாழ்ப்பாணக் கச்சேரியிலுள்ள இந்துக் கோயில்களின் பதிவுப் புத்தகத்திலே நாற்பத்தைந்தாவது ஆலயமாக பதியப்பட்டிருக்கிறது. இவ் ஐயனர் கோயிலானது செங்கற்றிடல் (ஆண்டிச்சீமா) என்னும் காணியிலே அமைந்துள்ளது. 1770ம் ஆண்டிலே இக்கோயில் கோபாலச்செட்டியார் வைத்தியலிங்கச் செட்டியார் என்பவரால் கற்களால் நிர்மாணிக்கப்பெற்று, கூரையானது ஓடுகளினல் வேயப்பட்டிருக்கிறது. இக்காலத்திலே கோயில் அறங்காவலராக பொன்னுச்சாமி செட்டியார் கண்ணப்ப செட்டியார் என்போரும் சோமசுந்தரச் செட்டியாரும் சுப்பையாச் செட்டியாரும் பிறரும் இருந்தவர்கள். கோயிலில் உற்சவங்கள் எதுவும் நடைபெறவில்லை. நித்திய பூசையானது ஒருகாலப் பூசையாகவே அக்காலத்தில் நடைபெற்றது. 1

ஐயனர் கோயிலிலே மூலஸ்தான விக்கிரகத்திற்கு முன்பாக இன்றும் ஓர் வட்ட வடிவமான கருங்கல் இருக்கின்றது. அதிலே "கு" என்ற எழுத்து பொறிக்கப்பெற்றுள்ளது. இந்த எழுத்து குருக்கள் என்பதையே குறிப்பதாகுமென சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்கள் கூறினர். என்றாலும் இவ்விடயம் ஆராய்ச்சிக்குரிய ஒன்றாகவே இருக்கின்றது.

ஐயனர் கோயிலானது ஓர் சிறிய ஆலயமாக விளங்கினலும் அதனுடைய கீர்த்தி பெரிதாகவே இன்றுவரையும் காணப்படுகின்றது. இதனையே அறிஞர்கள் பின்வருமாறு கூறுகின்றனர். "மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிது". இக்கோயிலானது கிழக்கு நோக்கிப் பார்த்தவண்ணமாக அமைந்துள்ளது. மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைக்கொண்டு அமைந்துள்ளது. இதனைச் சுற்றிச் சிறு பிராகாரமும் அமைந்துள்ளது.

## முதன்முதலிலே பிரதிஷ்டை செய்யப்பெற்ற ஸ்ரீ பூரணம்பா புட்கலாம்பா சமேத ஹரிஹர புத்திரப் பெருமானின் சிலாவிக்கிரகம்

ஐயனர் கோயிலிலே முதன்முதலில் பிரதிஷ்டை செய்யப்பெற்ற வெண்கல்லினல் உருவாகிய விக்கிரகம் ஒன்று பழுதடைந்த நிலையில்

1 இதனைப்பற்றி அநுபந்தம் 1ல் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கோயிலின் உள்வீதியிலே மூலஸ்தானத்திற்குப் பிற்பகுதியிலே கிழக்குத் திசையைப் பார்த்தவண்ணமாக தற்பொழுது வைக்கப்பட்டுள்ளது. இவ்விக்கிரகம் முன்னர் ஆலயத்தின் உள்ளேயுள்ள அர்த்தமண்டபத்திலே வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாளும் பூசையின்போது அர்ச்சகர் இவ்விக்கிரகத்திற்கும் தீபம், தூபம் காட்டுதல் வழக்கமாக இருந்து வருகிறது. தற்போது இவ்விக்கிரகம் ஆலய வீதியிலே அடியார்களின் வழிபாட்டுக்காக தனிக்கோயிலாக அமைக்கப்பட்டுள்ளது.

## பைரவ மூர்த்தி

பைரவர் கோவில் ஒன்று தனியாக ஐயனர் கோயிலுக்கு அருகிலே இருந்ததென்றும், இக்கோயில் பழுதடைய, அங்கிருந்த பைரவ சூலத்தினை ஐயனர் கோயிலின் உள்ளே மேற்குத் திசையைப் பார்த்தவண்ணமாக பிரதிஷ்டை செய்துள்ளார்கள். ஆனல் தற்போது இந்த பைரவ சூலத்தினை கோயிலின் தலவிருட்சமாக அன்றுதொட்டு இன்றுவரையும் விளங்கிவருகின்ற வில்வமரத்தின் கீழே, மேற்குத் திசையைப் பார்த்த வண்ணமாக பிரதிஷ்டை செய்திருக்கிறர்கள். இந்த முயற்சியானது ஆதியிலே எவ்வாறு பைரவர் சூலம் அமைந்திருந்ததோ அதேபோல தற்பொழுது அமைய வழிவகுத்துள்ளது.

சிவாலயத்திலே பைரவ மூர்த்தியை பரிவார தெய்வமாக பிரதிஷ்டை செய்து வழிபட்டுவருகின்றர்கள். பைரவர், கோயிலின் பாதுகாவல் தெய்வமாகும். பைரவ மூரத்தியை மூலஸ்தானத்திற்கு எதிரே கோபுரவாயிலுக்கருகே அமையப்பெற்றிருக்கும் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கருகே யாகசாலைக்கிடையே அமைப்பது மரபாகும்.

ஈழவளநாட்டிலே பைரவ மூர்த்தியின் வழிபாடானது அந்நியரது வருகையுடனே புதிய திருப்பத்தினை அடைகின்றது: அதாவது கி. பி. 1653குப் பின் ஈழநாட்டிலே அந்நியர் ஆதிக்கம் தொடங்கியதும், கிறிஸ்தவ மதம் வெகுவிரைவாகப் பரவத் தொடங்கியது. கத்தோலிக்க மதத்தை மக்கள் தழுவத் தொடங்கியதும், சைவக்கோயில்கள் இடிபடத் தொடங்கிய காலகட்டத்திலே, சைவப்பற்றுடையவர்கள் தமது ஆலயம் தரைமட்டமானதை அறிந்து மனம்நொந்தபோதும், தமது காவல்தெய்வமாகிய பைரவரைக் கல்லிலும், சூலத்திலும், தமது இல்லங்களிலும், புளியமரங்களின் கீழும், ஏனைய பொது இடங்களிலும், தனிப்பட்ட இடங்களிலும் அந்நிய ஆதிக்கவெறியர் கண்களுக்குத் தெரியாத வகையிலே வழிபாடியற்றி வருவாராயினர். ஈழவளநாட்டிலே பைரவ வழிபாடானது தனிச்சிறப்புப்பெற்றுக் காணப்படுவதாயிற்று. பைரவ மூர்த்தியின் வாகனமாக நாய் அமைந்து காணப்படுகிறது. இறைவன் பிரமனிடம் கோபங்கொண்டபொழுது அவன் தலையினைக் கொய்யும் வண்ணம் பைரவரைப் பணித்ததான வரலாறும் உண்டு. பைரவரை



ஸ்ரீ பைரவ மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் வீரபத்திரரையும் சிவனின் மூர்த்திபேதங்களாக நூல்கள் கூறுவன, எனினும் இவ்விருவரையும் இறைவனது மைந்தர்களாகக் கொள்ளும் மரபும் நிலவுகின்றது.

பைரவர் அம்பிகையின் அபிமான புத்திரராகக் கருதப்பெறுபவர்; தன்னை வழிபடும் அன்பர்களது துன்பங்கள் அனைத்தையும் துடைத்துக் காத்தருளும் சக்திமிகுந்தவர். பைரவர் என்று வழிபடும் பெருமை மிக்கவர். இந்தவகையிலே இவ்வூரிலே வாழ்ந்த மக்கள் பைரவ மூர்த்திக்கு நிவேதனமாக மிகச் சிறந்த பொருள் வடைமாலையாகும். வடை மாலை சாத்தி வழிபாடியற்றுவோர் அநேகர். பைரவரை வழிபட்டால் வீட்டில் உள்ள துன்பம் நீங்கும், கள்வர் பயம் நீங்கும், பகைவர் துயர் மறையும் என்ற நம்பிக்கையிலே வழிபாடியற்றிவந்தார்கள்.

ஐயனர் கோயிலுக்குப் பக்கத்திலே அமைந்த பைரவ மூர்த்திக்கு அக்காலத்திலே வாழ்ந்த மக்கள் வழிபாடியற்றி வந்தார்கள். இம் மூர்த்திக்கு மிகச்சிறந்த தினங்களாக செவ்வாய்க்கிழமையும் சனிக்கிழமையும் கொள்ளப்படுகின்றன. இந்தக்காலங்களிலே, அக்கால மக்கள் அபிடேக ஆராதனைகள் செய்து, பொங்கல், பூசையிட்டு பைரவ மூர்த்தியை வழிபாடு செய்தார்கள். அத்தோடு திரிசூலத்தைக் கையிலே தாங்கியிருந்து காவல்புரியும் பைரவ மூர்த்தியின் ஆயுதமாகிய திரிசூலத்தில் எலுமிச்சங்காயைக் குத்தி வழிபாடியற்றினர்கள்; இவ்வாருக வழிபாடியற்றும்போது, பைரவமூர்த்திக்கு சாந்தி ஏற்படும் வகையிலே பால், இளநீர், தயிர் முதலான அபிடேகத் திரவியங்களுடன் பலவிதமான பழங்களையும் அபிடேகிப்பது வழமையாக இருந்து வந்தது.

பைரவ மூர்த்திக்கு அபிடேக ஆராதனை முடிவுற்றதும் தூபமிட்டு வழிபாடு செய்வது சம்பிரதாயமாகும். இவ்விதமாசதூபமிட்டு பைரவ மூர்த்தியை வழிபடும்போது சில அன்பர்களிடத்திலே பைரவர் ஆவேசித்து ஆடுவதும் வழமையானதே. இவ்விதம் ஆவேசித்து நின்று ஆடும்போது பைரவர் குறிசொல்வதும், பில்லி, சூனியம், சிறு தேவதைகளால் ஆட்கொள்ளப்பெற்றவர்களை விட்டு அவைகள் விலகுவதும் கண்கூடு. இந்த வகையாக பைரவர் வழிபாட்டினுல் அக்காலந் தொட்டு இக்காலம் வரையிலும் மக்கள் தமது வாழ்வில் பலவகையான நன்மைகளையும் பெற்றுவருவதை அனுபவத்தில் நாம் காணக்கூடியதாயிருக்கிறது.

## ஐயனர் கோயிலின் ஸ்தாபகரது வரலாறு

ஐயனர் கோயில் கும்பாபிஷேகம் முதன்முதலாக 1770ம் ஆண்டில் நிகழ்ந்ததாக அறியமுடிகின்றது. 17ஆம் நூற்ருண்டின் நடுப்பகுதியிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போத்துக்கீசரிடமிருந்து ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றினர். இவர்கள் சமயச் சகிப்புத்தன்மை சிறிதும் இல்லாதோர். மிகக்கொடுமையான முறையிலே இந்நாட்டிலே நிலவிய மதங்களை இவர்கள் அழித்துத் தமது மதத்தை எம்மவர்மீது திணித்தனர். இவர்கள் காலப்பிரிவிலே வண்ணார்பண்ணையிலே வாழ்ந்த வைத்திலிங்கச் செட்டியார் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலையும், ஐயனார் கோயிலையும், காளி கோயிலையும் வேறுபல ஆலயங்களையும் கட்டினார் என்பது வரலாறு.

பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே தென்னிந்தியாவில் சோழநாட்டிலுள்ள திருவாரூரிலிருந்து வந்த பெருவணிகர் திரு. கோபாலச் செட்டியார் அவர்கள் மனைவியுடன் 'இல்வாழ்க்கையை இனிது வாழ்ந்து வந்தார். இவரின் நேர்மையை மக்களும், அப்போதிருந்த ஒல்லாந்த தேசாதிபதி அந்தோனி மூயார்ட்டும் மிகப் புகழ்ந்தார்கள். இவருக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தையைப் பார்க்கவந்த பெரும்புலவர் கூழங்கைத் தம்பிரான் அவர்கள். ''வைத்தியலிங்கம் எனப் பெயரிடுக'' எனக் கூறி ஆசி வழங்கினார். மிகுந்த அழகும், பண்பும் மிகுந்த இக்குழந்தையை மக்கட் செல்வமில்லாத தேசாதிபதியின் மனைவி விருப்புடன் ஆதரித்து, தம்பிள்ளைபோலவே கருதி வளர்த்துவந்தார். குழந்தை வளர்ந்துவரும் காலத்தில் முத்துக்குத்தகை ஏலம் விடப்பட்டது. ''அக்குத்தகையை நான் வாங்கப் போகிறேன்'' என அம்மையாரிடம் சிறுவர் கூற, அம்மையார் அதற்கிசைந்து எழுதிக்கொடுத்த கைச்சீட்டுடன் யாழ்ப்பாணக் கச்சேரி சென்று சீட்டைத் தேசாதிபதியிடம் கொடுத்தார். சீட்டைப்படித்த தேசாதிபதி தம் பெயரிலேயே பிணை எழுதிக் குத்தகையைக் கொடுத்தார். முத்துக்குத்தகைமூலம் பலலட்சம் ரூபாய்கள் வைத்தியலிங்கச் செட்டியாருக்குக் கிடைத்தன.

இந்நிலையைக் கண்ட கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள் செட்டியாரைத் தவப்பணியில் ஈடுபடுத்தினார். செட்டியாரவர்கள் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலை ஸ்தாபித்தார். இக்கோயிலுக்கு காவல் தெய்வமாக வண்ணார்பண்ணையின் வடமேற்குப் பகுதியிலே ஸ்ரீ பூரணாம்பா புட்கலாம்பா சமேத ஹரிஹர புத்திர ஐயனார் கோயிலையும் அருள்மிகு சர்வசக்தி ஸ்ரீ மங்கள மகா காளியம்பாள் கோயிலையும் தெற்குப்பக்கத்திலே கடைத்தெரு வேம்படி சித்திவிநாயகர் ஆலயத்தையும், இதற்கு வடக்கேயுள்ள பைரவ கோயிலையும், மேற்கேயுள்ள பண்ணையில் மீனாட்சி அம்மன் கோயிலையும் ஸ்தாபித்தார். சிவபுண்ணிய கைங்கரியத்திற்குப் பல வழிகளிலே பொருள்திரண்டது. காணி பூமிகள் சேர்ந்தன. ஈழத்திலும் சிதம்பரத்திலும் மிகத்தொகையான காணி பூமிகளையுடையதாக வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் இன்றும் விளங்கி வருகின்றது.



## கோயிற் பரிபாலனமும் திருப்பணியும்

ஐயனார் கோயிலின் பரிபாலனம் முன்னர் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் அறங்காவலரால் பரிபாலிக்கப்பெற்று வந்தது. காலப்போக்கில் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் அறங்காவலர் இப்பரிபாலனத்தில் அதிக கவனம் செலுத்தாதுபோகவே, கோயிலின் பரிபாலனமானது வீரசைவக் குருக்கள் பரம்பரையினருக்கும், இவ்வூரிலே வாழ்கின்ற பொது மக்களுக்குமுள்ள ஒன்றாகவே மாறிவிட்டது. ஐயனார் கோயில் உரிமைபற்றிய வழக்கு 1930ஆம் ஆண்டு நடைபெற்றது. இக்கோயிலைக் கட்டிய வைத்தியலிங்கச் செட்டியாரின் பரம்பரையினருக்கும் வீரசைவக்குருக்கள் பரம்பரையினருக்குமிடையே இவ்வழக்கு நடைபெற்றது. இவ்வழக்குத் தீர்வைக் கொப்பியின் இலக்கம் 23427 இல் விபரமாகக் குறிக்கப்பெற்றுள்ளது.

இக்கோயிலைத் தற்பொழுது பரிபாலித்து வருபவர்கள் கோயிலின் தற்போதைய பூசகர் திரு. செல்லப்பா அப்பாத்துரை அவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் ஊர் மக்களுமேயாகும். இப்பரிபாலனமானது எதுவிதமான நிருவாக அமைப்புமில்லாது, எல்லோருக்கும் சமவாய்ப்புக் கொடுக்கின்ற ஆலயமாக விளங்கிவருகின்றது. இக்கோயிலின் வளர்ச்சிக்கு ஆதரவு கொடுக்கின்ற அனைவரது முயற்சியும் பெறப்பட்டு, படிப்படியாக வளர்ச்சி அடைந்துகொண்டிருக்கின்ற ஆலயமாகத் திகழ்கின்றது.

பலகாலங்களாக பழுதடைந்திருந்த கோயிலை 1980ஆம் ஆண்டிலே ஓரளவு திருத்தவேலைகளைச் செய்து, பழுதடைந்த சுவர்களையெல்லாம் திருத்தி அமைத்து, அவ்வாண்டிலே கும்பாபிஷேகம் நிறைவேறியது. காலப்போக்கில் இவ்வூரிலே சிறு கோயிலாக அமைந்துள்ள காளிகோயில் பல அடியார்கள் நின்று வழிபடக்கூடிய ஒரு விஸ்தாரமான கோயிலாக உருவாயிற்று. இந்த முறையினைப் பின்பற்றி, 1985ஆம் ஆண்டுவரை ஒரு சிறு ஆலயமாக இருந்த ஐயனார் கோயிலின் அர்த்தமண்டபத்தையும், மகாமண்டபத்தையும் விஸ்தாரப்படுத்தி, பல அடியார்கள் ஒரே நேரத்தில் நின்று வழிபடக்கூடிய ஆலயமாக மாற்றியமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்திருப்பணி வேலைகள் நடைபெறமுன்னர், மூலமூர்த்தியினை வெளியே எடுத்து பாலஸ்தாபனம் செய்யாது, மூலமூர்த்தியிருந்த இடத்திலே இருக்கத்தக்கதாக அவ் மூலமூர்த்திக்கு ஒரு தனிக்கோயிலை உள்ளே அமைத்த பின்னரே திருத்தவேலைகள் ஆரம்பமானது.

மூலஸ்தானத்திற்கு மேலே அமைந்துள்ள விமானம் முன்பு பழுதடைந்த நிலையிலே இருந்தது. தற்பொழுது பலவர்ண வேலைப்பாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுடன் கூடிய கலையழகு மிகு விமானமாக விளங்குகின்றது. கோயிலின் பாவனைக்கென ஒரு மடைப்பள்ளியில்லாதது பெருங்குறையாகவே இருந்தது; இக்குறையினை நிவர்த்திசெய்வதற்காக ஒரு மடைப்பள்ளி கோயிலின் வாசலின் வலதுபக்க மூலையிலே அமைக்கப்பெற்றிருக்கின்றது. கோயிலினுடைய கூரையானது முன்னர் மிகப்பதிவாக அமைந்திருந்தது. இப்பொழுது இவை மேலுக்கு உயர்த்தி, திருத்தி அமைக்கப்பெற்றிருக்கிறது.

முன்னர் ஆலயத்தின் உள்ளே அர்த்தமண்டபத்திலே அமைக்கப்பெற்றிருந்த பைரவ சூலத்தினை தற்பொழுது வில்வமரத்தின் கீழே தனிக்கோயில் கட்டி அமைத்திருக்கிறார்கள். புராதனமான மூலமூர்த்தியாகிய ஐயனாரின் விக்கிரகத்திற்கென கோயிலின் பிராகாரத்தின் மூலஸ்தானத்திற்கு நேரே, பின்புறத்திலே தனிக்கோயில் அமைத்திருக்கிறார்கள். கோயிற் பிராகாரத்தைச் சுற்றிவரக்கூடியதாகவும், பாதுகாப்புக்காவும் மதிற்சுவர்கள் அரைமட்ட உயரம் வரை அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கோயிலானது இப்பொழுது சகலவிதத்திலும் சிறப்பாக அமைந்த ஆலயமாக விளங்கி வருகின்றது. இதற்கெல்லாம் காரணம் ஐயனாரின் அருட்செயலேயாகும் எனில் மிகையில்லை

## கோயில் வழிபாட்டு மரபும் கிரியைகளும்

ஐயனாரைச் சைவமக்கள் மட்டுமன்றி வைணவ சமயத்தவரும் பௌத்தர்களும் வழிபட்டு வருகின்றனர். தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் ஈழநாட்டிலும் ஐயனார் வழிபாடு மிகச் சிறப்பிடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐயனார் வழிபாட்டின் பயன்பற்றியும் பல கருத்துக்கள் உண்டு. இத்தெய்வ வழிபாட்டில் மகாவிஷ்ணு, சிவன், முருகன் ஆகிய கடவுள்களை வழிபட்டதனால் கிடைக்கும் பலன்கள் கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும். மைந்தனுக்குச் செய்யும் சிறப்பால் தந்தை தாயர் மகிழ்வர். நம்மைக் காக்கும் தெய்வம் ஐயனார். ஆகவே ஐயனார் நமது பாதுகாவலன். ஐயனார் நாம் வேண்டும் நலங்களனைத்தையும் நாம் வேண்டியவாறே அருளுபவர். ஐயனார் முருகனைப்போன்று கலியுகவரதன் என்ற திருநாமம் கொண்டவர். ஐயனாரை அன்புடன் வழிபட்டு "ஐயனாரே; ஐயனாரே" என்று பலகாலும் கூறித் தியானிப்பவர்கள் என்றும் குறையாத பெரும் செல்வத்தை நிச்சயம் பெறுவார்கள். அவர்கட்குத் துன்பமோ நோயோ அணுகாது. அவர்களது சுற்றம், கிளை உயர் இன்பம் நுகர்ந்து நீடூழி காலம் வாழ்வர். இத்தன்மைக்கு எடுத்துக்காட்டாக வண்ணார்பண்ணை ஐயனார்கோயிலைச் சூழவாழும் அடியவர்கள் மூலம் நாம் கண்ணாரக் காணக்கூடியதாயிருக்கிறது.

மக்கள் இறைவனை வழிபடுவதற்கு இரண்டு காரணங்களுண்டு. ஒன்று பயம், மற்றையது தேவை. மக்கள் மேற்குறிப்பிட்ட இரண்டு



காரணங்களையும் அடிப்படையாக வைத்தே, இறைவனை வழிபட்டுவருகின்றனர். இந்த வகையிலே ஐயனார் வழிபாடும் சிறப்படைகின்றது. கிராமங்களில் மழையில்லாத காலங்களிலும், அம்மை நோய், வாந்திபேதி முதலான நோய்கள் ஏற்படும் காலத்திலும், மாடுகளுக்குக் கோமாரி முதலிய நோய்கள் வருகின்ற நேரத்திலும் மக்கள் ஐயனாரை வழிபட்டு, தங்களுடைய துன்பங்களைப் போக்குவதும், இத்தெய்வத்தை வழிபடுவோர் அனுபவத்தில் கண்ட உண்மையாகும்.

ஐயனாரின் பிறிதொரு அவதாரமே ஐயப்பனாகும். ஐயப்பன் வழிபாடு கேரளத்தில் சிறப்பாகப் போற்றப்பெற்று வருகிறது. இன்று தென்னாட்டிலுள்ள நகரங்களிலும், கிராமங்களிலும் பல லட்சம் மக்களும் இலங்கையிலுள்ள மக்களும் ஐயப்பன் வழிபாட்டை மேற்கொண்டு, குறிப்பிட்ட காலங்களில் இந்தியாவில் கேரள நகரத்திலுள்ள சபரிமலைக்கு பாதயாத்திரை சென்று வருகின்றனர். ஒரு மண்டல காலம் காலை, மாலை இருவேளைகளிலும் நீராடித் தியானம் செய்தல் க்ஷவரம் செய்துகொள்ளாமலிருத்தல், உணவு, உடை இவைகளில் சில நியதிகளை மேற்கொள்ளுதல் போன்ற சில நெறிமுறைகளை மேற்கொண்டு "சாமியே சரணம் ஐயப்பா" எனப் பாராயணம்செய்து மக்கள் ஐயப்பன்வழிபாட்டை மேற்கொள்கின்றனர். விரதமுடிவில் இருமுடி சுமந்து சபரிமலை பாதயாத்திரை செய்து, ஐயப்பனை வழிபட்டு நன்மைகள் பலவும் பெறுகின்றனர். இந்த நோன்பை மேற்கொள்வோர் விரதம் முடிந்ததும், தாங்கள் மேற்கொண்ட தியானம், வழிபாடு முதலிய பழக்கங்களைக் கைவிடாமல் தொடர்ந்து கடைப்பிடித்துவந்தால் மேலும் பல பலன்கள் கிடைக்கும் என்பது இந்து சமயிகளின் உண்மையாகும்.

## ஐயப்பன்மார்கள் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள்

கார்த்திகை மாதம் முதல் தேதியிலிருந்து 19ம் தேதிக்குள் ஒரு நல்ல முகூர்த்த நாளில் ஆலய வழிபாட்டுக்குப் பின் மூன்று நான்கு முறை சபரிமலை யாத்திரை சென்ற ஒருவரை குருநாதராக ஏற்று அவர் ஆசிகளுடன் அவர் கையால் கழுத்தில் துளசி மணி அல்லது ருத்திராக்க மாலையை அணிவிக்கச் செய்து ஐயப்பன் விரதத்தைத் தொடக்க வேண்டும்.

மாலைபோட்டுக்கொண்ட தினத்திலிருந்து காலை மாலை இருவேளைகளிலும் ஸ்நானம் செய்து ஐயனை வழிபட்டு "சாமியே சரணம்" என்று சொல்லவேண்டும். அன்றிலிருந்து முகக்ஷவரம் மயிர்வெட்டிக்கொள்வது எல்லாம் நிறுத்தப்படவேண்டும். சபரி மலையிலிருந்து திரும்பிவந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திக்கேற்றவாறு ஆராதனை செய்தபிறகே முடியை அகற்றவேண்டும். மது, மாமிசம், லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதை உடனே நிறுத்த வேண்டும்.

நூற்றுக்கு நூறு விகிதம் பிரமச்சரியத்தை மேற்கொள்ளவேண்டும். எந்தவிதத்திலும் இதற்குப் பங்கம் வரக்கூடாது. வீட்டுக்கு விலக்கான ஸ்திரீகளைப் பார்ப்பதோ பேசுவதோ கூடாது: செருப்பு உபயோகிப்பது, கட்டில் மெத்தையிலே படுப்பது விலக்கப்படவேண்டும். கருப்பு அல்லது நீலநிறத் துணியை உடுத்தல்வேண்டும். அலுவல் காரணமாக இது சாத்தியப்படாவிட்டால் விரதம் இருப்பதற்கு அடையாளமாக ஒரு கருப்புச் சின்னத்தையாவது அணியவேண்டும்.

ஐயப்பன் விரதம் மேற்கொண்டவன் என்பதை இந்தச் சிறப்பு உடை உணர்த்தும். ஜோதி தரிசனம் செய்யப்போகுமுன் மனம், உடல் எல்லாவற்றையும் விரதம் இருப்பதன் மூலம் சுத்தம்செய்துகொள்கிறோம். நம் உடலிலுள்ள அக அழுக்குகளான அகங்காரம், கோபம், நாபம் முதலியவை வெளிப்படும் காலம் என்பதையே கருப்புத்துணி காட்டுகிறது. கருப்பு என்பது விஷ்ணுவின் வர்ணம். வெண்மை என்பது சிவபெருமானின் வர்ணம். எப்பொருளையும் எரித்தால் அது கருப்பாகிவிடுகிறது. அப்படிக் கருப்பாகியுள்ளதையும் எரித்தால் அது வெண்மைநிறம் அடைகிறது. விஷ்ணுவின் நிறமான கருப்பை அணிந்து சிவனின் நிறமான வெண்மை ஜோதியைத் தரிசிக்கப் போவதையே இது குறிக்கிறது. 1

## கோயிற் கிரியைகள்

திருக்கோயில்களில் நிகழும் கிரியைகளை நித்திய கிரியை, நைமித்திய கிரியை, காமிய கிரியை என மூவகைப்படுத்தலாம். தினந்தோறும் நிகழும் கிரியை முதலியன நித்திய கிரியைகள் என்றும், காரணங்கொண்டு நிகழும் திருவிழாக்கள் நைமித்திய கிரியைகள் என்றும், இறைவனிடம் பெறவேண்டிச் செய்யப்படும் யாகம், அபிடேகம், பொங்கல் போன்றவை காமிய கிரியைகள் என்றும் அழைக்கப்படுவன.

## நித்திய கிரியைகள்

தினமும் அவ்வக் கோயில்களின் வசதிக்கும் மரபுக்கும் ஏற்ப பலமுறை நடக்கும் பூசை நித்தியபூசையாகும். இப்பூசையானது ஒரு காலப் பூசை, இரண்டு காலப் பூசை, மூன்றுகாலப் பூசை, ஆறுகாலப் பூசை, பன்னிரண்டு காலப்பூசை போன்ற கால எண்ணளவின் அடிப்படையிலே நிகழுகின்றன. ஐயனார் கோயிலில் இரண்டு காலப் பூசைகள்தான் நடைபெறுகின்றன. இப்பூசைகளானது உச்சிக்காலப் பூசை,

1 ''சுவாமியே சரணம் ஐயப்பா'' என்ற புத்தகத்திலுள்ளது.



சாயரட்சைப் பூசை என அழைக்கப்படும். இப்பூசைகள் ஒவ்வொன்றிலும் அபிடேகம், அலங்காரம், நிவேதனம், தீபாராதனை, அருச்சனை, தோத்திரம், வாழ்த்து என ஏழு அங்க நிகழ்ச்சிகள் இடம்பெறுவன; காலையிலே ஐயனுருக்குப் பூசை நடைபெறாவிட்டாலும் அர்ச்சகர் கோயிலைத் திறந்து திருப்பள்ளியெழுச்சி, சிவபுராணம் என்பவற்றினை மனவமைதியுடன் ஓதி, வழிபாடு செய்கின்ற வழக்கம் இருந்துவருகின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## நைமித்திய கிரியைகள்

நித்திய கிரியைகளில் ஏற்படுகின்ற குறைபாடுகளை நிறைவுசெய்யும் நோக்கத்தில் நிகழ்த்தப்படும் கிரியை நைமித்திய கிரியையாகும். இவ்வகைக் கிரியைகள் குறிப்பிட்ட விசேஷ தினங்களில் மட்டும் நிகழ்வன. இவ்விசேஷ தினங்கள் வாரத்திற்கு ஒருமுறை அல்லது இரு வாரங்களுக்கு ஒருமுறை நிகழலாம். சில, மாதத்திற்கு ஒருமுறை அல்லது சில மாதங்களுக்கு ஒருமுறை நிகழ்வன. வருடமொரு முறையும், பலவருடங்களுக்கு ஒருமுறையும் நிகழும் நைமித்திய கிரியைகளும் உண்டு. இவ்வாலயத்தில் நிகழுகின்ற நைமித்திய கிரியைகளாவன: சித்திரையில் வரும் சித்ரா பௌர்ணமி, மார்கழித் திருவெம்பாவை, தைப்பிறப்பில் வரும் தைப்பொங்கல், தைப்பூசம், கும்பாபிசேக தினம், சங்காபிஷேகம் ஆகியனவாகும். அத்தோடு ஏனைய சைவப் புண்ணிய காலங்களிலும் ஐயனுருக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்படுதல் வழமையாகும்.

சித்திரை மாதத்திலே வருகின்ற பௌர்ணமித் தினத்தன்று ஐயப்ப சுவாமிகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அன்று கோயிலின் முன்றலிலே பெரிய பானை வைத்து, சித்திரைக்கஞ்சி காய்ச்சி எல்லா அடியார்களுக்கும் வழங்கப்படுதல் இன்றும் நடைபெற்றுவருகின்றன. இந்நாட்களிலே ஏராளமான பக்தர்கள் ஆலயத்தில் கூடுவார்கள். காரணம் ஐயப்ப சுவாமிகளுடைய சித்திரைக்கஞ்சியினை அருந்தி, அவருடைய அருளுக்குப் பாத்திரமாவதற்காகும்.

திருவெம்பாவை விரதகாலங்களில் காலையிலே பெருமானுக்கு அபிடேகமும் விசேட பூசையும் நிகழ்த்தப்பெற்று, திருவெம்பாவைப் பாடலும் ஓதப்பெறுதல் வழக்கமாக இருந்துவருகின்றது. தைப்பொங்கலன்று கோயிலிலே எம்பெருமானுக்கு அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், அர்ச்சனை, தோத்திரம், வாழ்த்து என்பன இடம்பெற்று, பல அடியார்கள் ஒன்றுசேர்ந்து கோயில் முன்றலிலே அடுப்புவைத்து பொங்கிப் படைத்து வழிபடுதல் வழமையாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வருடமும் தைமாதத்தில் வரும் தைப்பூசத் தினத்தில் (சிலவேளைகளில் தைப்பூசத்துடன் சேர்ந்துவரும் பௌர்ணமியில்) வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலிலுள்ள பூரணும்பா புட்கலாம்பா சமேத ஹரிஹர புத்திரப் பெருமான் யானைவாகனத்திலே ஆரோகணித்து காங்கேசன்துறை வீதிவழியாக இவ்வாலயத்திற்கு வந்து திருக்காப்புக் கட்டும் முறைமை அக்காலந்தொட்டு இன்றுவரை இருந்துவருகின்ற ஒன்ருகும். எல்லைத் தெய்வத்திடம் காப்புக்கட்டிச் சென்றுதான் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலிலேயுள்ள வைத்தீஸ்வரப் பெருமானுக்கு வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாவது மரபாக இருந்துவருகின்றது.

மாசிமாதத்திலே வருகின்ற பூரணைத் தினத்தன்று வைத்தீஸ்வரன் கோயிலிலுள்ள காளியம்பாள் எழுந்தருளி, காங்கேசன்துறை வீதியால் ஊர்வலமாக வந்து, ஐயனர் கோயிலடியிலுள்ள காளியம்பாளிடத்தே காப்புக் கட்டிக்கொண்டு செல்லும் மரபு இன்றுவரையும் இருந்துவருகின்றது. எல்லைத் தெய்வமாகிய காளியம்பாளிடம் காப்புக்கட்டிய பின்புதான் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் அம்மன் திருவிழா ஆரம்பமாவது குறிப்பிடத்தக்க ஒன்ருகும்.

ஐப்பசி மாதத்திலே வருகின்ற நவராத்திரி காலத்தின் இறுதி நாளான விஜயதசமியன்று மானம்பூத் திருவிழாவுக்காக வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலிலுள்ள அம்பாள் எழுந்தருளி, திருவுலாப்போந்து காளி கோயிலுக்கு முன்னுள்ளதும், ஸ்ரீ விசுவேசப் பிள்ளையார் கோயிலின் தெற்குப் பகுதியிலே அமைந்த இடத்தினை அடைந்து, அங்கு மானம்பூத்திருவிழா (வாழைவெட்டு) நடைபெறுவது வழக்கமாகும். இறுதியாக அம்பாள் காளிகோயிலுக்கு எழுந்தருளி மடை, பூசை போன்ற உபசாரங்களை ஏற்றருளி, திருவுலாப் போந்து, தமதிருப்பிடம் அடைவது வழக்கமாகும்.

இத்திருவிழாவின்மூலம் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்கும் ஐயனர் கோயிலடியில் அமைந்துள்ள காளி கோயிலுக்கும் ஐயனர் கோயிலுக்குமுள்ள தொடர்பினை அறிந்துகொள்ள முடிகின்றது.

## கும்பாபிஷேகம்

ஐயனர் கோயிலின் கும்பாபிஷேகமானது முதன்முதல் 1770ஆம் ஆண்டிலே நடைபெற்றது. இதற்குச் சான்ருக கச்சேரியிலுள்ள கோயிற் பதிவும், பழைய விக்கிரகத்தின் கீழே இருப்பதாகக் கூறப்படும் இரு நாணயங்களும் சான்று பகருகின்றன. இவ்விரு நாணயங்களும் ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவையாகும். ஓர் நாணயத்தில் 1770ஆம் ஆண்டு என்றும் மற்றுமோர் நாணயத்தில் 1870 ஆம் ஆண்டு என்றும்



குறிக்கப்பெற்றுள்ளதாக இக்கோயிலோடு தொடர்புடையோர் மூலம் அறிய முடிகின்றது.

மற்றைய வருடங்களில் கும்பாபிடேகம் நடைபெற்றது என்றுலும் கும்பாபிஷேகம் பற்றிய தரவுகள் எதுவும் கிடைக்கவில்லை. இறுதியாக 1980ஆம் ஆண்டிலே கிலமடைந்தகோயிலை, ஓரளவு இவ்வூரிலே வாழ்கின்ற மக்கள் பணவுதவி, பொருளுதவி புரிந்து திருத்தியமைத்து, 1980ஆம் ஆண்டு சித்தார்த்தி வருடம் பங்குனி 21ந் திகதி (ஏப்ரல் 3ம் திகதி) வியாழக்கிழமை சுவாதி நட்சத்திரத்திலே வீரசைவ மகா குருவும் பரம்பரைப் பூசகருமான சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்களே கும்பாபிஷேகத்தை நிறைவுற நடாத்திஞர். வருடாவருடம் இக் கும்பாபிஷேகம் நடைபெற்ற தினத்திலே ஐயனருக்கு விசேட அபிடேக ஆராதனையும், அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பெற்று வருகின்றன.

இத்தகைய அருட்சிறப்பும் கீர்த்தியும் பெற்ற இவ்வாலயத்தில், 1985ல் கிலமுற்றுப் பழுதடைந்த ஆலயத்தை திருத்தும் திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, மூலமூர்த்திக்கு புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் குரோதன வருடம் ஐப்பசி மாதம் 10ந்திகதி (26-10-85) சனிக்கிழமை உத்தரட்டாதி நக்ஷத்திரமும் சனிப்பிரதோசமும் கூடிய சுபதினத்தன்று நிறைவேறுகின்றமை ஐயனரின் திருவருளேயன்றி வேறில்லை.

## காமியக் கிரியைகள்

பயனை விரும்பிச் செய்யப்படும் கிரியைகள் காமியக் கிரியையாகும். நைமித்தியக் கிரியைகளும் காமியக் கிரியைகளாகலாம். சிறப்பாக லட்சார்ச்சனை, யாகங்கள் போன்றவை காமியக் கிரியையாகும். நாட்டில் பஞ்சம், நோய் பரவுங் காலத்தில் அரசர்களாலோ, மக்களாலோ துன்பம் தீர்த்து, அருள்தரும்படி இறைவனை வேண்டிச் செய்யப்படுபவை அனைத்தும் காமியக்கிரியைகள் எனலாம். இவ்வாலயத்தில் பல அடியார்கள் தங்கள்தங்களுடைய நினைத்த காரியம் நிறைவேறியதும், ஐயனருக்கு அபிடேகம் செய்து வழிபடல், பொங்கல் படைத்து வழிபடல், பூசைகட்டி வழிபடல் போன்ற முறைமைகள் இன்றுவரை இருந்துவருகின்றது.

## கோயிற் குருக்கள் பரம்பரை

வீரசைவ மதத்திற்கும் தொன்மையான வரலாறுஉண்டு. வீரசைவமானது ஈழநாட்டின் பலபாகங்களிலும், பாரத நாட்டின் பல மாநிலங்களிலும் மிகச் சிறப்புற்ருேங்கியதென வரலாறு வாயிலாகவும் மரபுவழியாகவும் அறியக்கூடியதாயிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் ஈழநாட்டிலும் வீரசைவம் பரவலாக எங்குமிருந்துள்ளது: எங்கள் இராவணேஸ்வரன் வீரசைவனென்பதே வழக்கம். எங்கள் பிரசித்திபெற்ற யாத்திரா தலங்களுளொன்ருன சிவனொளி பாதம் இந்த நாட்டுப் பண்டைய வீரசைவ பரம்பரையின் வழிபாட்டு நிலயமே என்னும் வழக்கு உண்டு. வீரசைவச் சார்புள்ள இந்திய மன்னர்கள் இலங்கையை ஆண்ட காலங்களில் இது சம்பவித்திருத்தல் தவிர்க்கமுடியாத தொன்ருகும்.

பஞ்சலிங்கோற்பன்னருள் ஒருவராகிய ஸ்ரீ இரேணுகாசாரியார் வான்வழியே வந்து இலங்காதுவீபத்துச் சிரஞ்சீவியாயிருந்து வீபீஷணனுக்குச் சிவலிங்க தீட்சையும் நாடெங்கும் ஒரே முகூர்த்தத்தில் மூன்று கோடி சிவலிங்கப் பிரதிட்டையும் செய்து திரும்பினுர். அவ்வழியே இலங்கையில் வீரசைவம் வளர்ச்சியுற்றது. அவ்விரேணுகா சிவாசாரியாரிடத்தேயே சிவமூர்த்தமாகிய அலங்கார ரூபனும் பிரமபுத்திரனுன தக்கனது யாக சங்கரமூர்த்தி வீரபத்திரப் பெருமான் லிங்கதீட்சை பெற்று லிங்காயத்ததின் பாதுகாவலரானுர். அப்பெருமானைத் தம் குலதெய்வமாகவும் குருமூர்த்தமாகவும் கொண்ட குருகுல வம்சத்தார் அப்பெருமானுக்குத் தம் வசிப்பிடமாகிய குரக்கன்துறையில் (காங்கேசன்துறை) கோயிலமைத்து அவரை எழுந்தருளச் செய்து வழிபட்டுய்தி பெறுவாராயினர். அவர்களிற் சிலர் தற்கால நவநாகரிகச் சுழல் காற்றிலகப்பட்டுத் தம் பரம்பரை வீரசைவ ஒழுங்கு முறைகளைக் கைவிடினும் பலர் தம் பழைய லிங்காயத சைவ ஒழுங்கின்படியே வாழ்கின்றனர். அவர்களை குரக்கன்துறை வீரபத்திர குருமூர்த்தம் காத்து அருள் பாலிக்கின்ருர்.

ஸ்ரீ இரேணுகாசாரியாரின் வருகையால் இலங்கையில் வீரசைவ குருபீடமொன்று ஸ்தாபிதமாயிற்று. மட்டக்களப்புக்குத் தெற்கே 72 மைல் தூரத்திலுள்ள திருக்கோயிலும் திருஞானசம்பந்தரால் தேவாரத் திருப்பதிகம் பாடப்பெற்ற திருக்கோணேச்சுரமும், வீரசைவக்குருமாரின் ஆராதனைத் தலங்களாயின. மட்டக்களப்புத் திருக்கோயிலிலுள்ள மூலவர், இந்திரனுல் முசுகுந்தச் சக்கரவர்த்திக்குக் கொடுக்கப்பட்ட 25 சோமாஸ்கந்த மூர்த்தங்களிலொன்ருகும். அச்சோமாஸ்கந்த லிங்க மூர்த்தத்தை ஆராதிக்கும் லிங்காயத ஜங்கம குருவுக்கு, அத்திருக்கோயிலுக்குச் சமீபத்தேயுள்ள தம்பட்டையென்னும் கிராமம் மானியமாக விடப்பட்ட செய்தி இன்றும் அக்கிராமத்தில் வாழும் ஜங்கமக்குரு பரம்பரையினரிடமிருக்கும் செப்பேட்டிலிருந்து அறியலாம். திருக்கோணேச்சுர ஆராதனை செய்த ஜங்கமக் குருபரம்பரையைப் பற்றிய விபரம் 1802ஆம் ஆண்டு திருக்கோணமலையைப்பிடித்த ஆங்கில அரசிடம் அமைந்துள்ளது. அப்பரம்பரையினர்



யாழ்ப்பாணத்துக்கும் பரவினர். அவர்கள் யாழ்ப்பாணத்திலே ஒரு வீரசைவ குருபீடத்தை ஸ்தாபித்தனர்.

யாழ்ப்பாண வீரசைவ குருபீடம் ஸ்ரீ இரேணுகாச்சிரமத்தையமைத்து வண்ணுர்பண்ணையில் அமர்ந்து தென்னிந்திய கும்பகோணத்து வீரசைவக் குருபீடத்துடனிணைந்து அதன்கீழமைந்து இலங்கையில் வீரசைவத்தை வளர்த்துவரலாயிற்று. அதன் 108வது குருபீடத்தில் சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்களென்னும் கைலாச தேசிகர் அமர்ந்துள்ளார். அக்குருவானவர் வீரசைவத்தை யாழ்ப்பாணத்தில் விசேடமாகவும் இலங்கையிற் பொதுவாகவும் வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். தென்னிந்திய மைசூர் இராச்சியத்திலுள்ளார் பெரும்பான்மையோர் வீரசைவரே. அவர்களுடனும் கும்பகோண வீரசைவக் குருபீடத்துடனும் நெருங்கிய தொடர்புகொண்டு தாம் நல்குரவெய்தியக்கண்ணும் சமய வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாகவுள்ளார். வீரசைவ நித்திய கர்ம விதியும், லிங்கோபநிடதமும் தமிழில் வெளிப்படுத்தியுள்ளார்.

ஐயனுர் கோயிலிலே பூசைசெய்துவந்த வீரசைவக் குருக்கள் பரம்பரையினர் பின்வருமாறு இடம்பெறுகின்றனர். இக்கோயில் உருவான காலத்தில் முதன்முதலில் பிரதிஷ்டை செய்தவர் சிவஸ்ரீ மயில்வாகனக் குருக்கள் ஆவர். இவரே இப்பரம்பரையினரின் பிதாமகர் எனலாம். இவரைத் தொடர்ந்து சிவஸ்ரீ அருணகிரிக் குருக்கள், சிவஸ்ரீ அம்பலவாணக் குருக்கள், சிவஸ்ரீ கைலாசக் குருக்கள், சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள், சிவஸ்ரீ நாகமுத்துக் குருக்கள், சிவஸ்ரீ சிதம்பரக் குருக்கள், சிவஸ்ரீ சி. கைலாயக் குருக்கள், (ஐயம்பிள்ளைக் குருக்கள்) ஆகியோர் இக்கோயிலோடு பரம்பரை வழியாகத் தொடர்ந்து பூசை செய்துவந்தவர்கள் எனலாம். தற்பொழுது மேற்கூறியோரின் பரம்பரையிலே வந்த திரு. செல்லப்பா அப்பாத்துரை (அப்புத்துரை) அவர்கள் கோயிலிலே பூசகராக கடமையாற்றி வருகின்ருர்.

கோயிற் பூசகரில் வயதால் மூத்தவரும், அறிஞரும் தற்பொழுது அமைதியான வாழ்க்கையை நடாத்திக்கொண்டிருக்கின்றவரும், ஈழவளநாடு வீரசைவ குருமகா சந்நிதானம் கீரிமலை, ஸ்ரீ இரேணுகாச்சிரம மகாகுரு சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் (கைலாச தேசிகர்) அவர்களும் குறிப்பிடத்தக்கவராவர். இவரின் வாழ்க்கை வரலாற்றினை தனித்து நோக்குவாம்.[1] இவரின் 75ஆம் ஆண்டு பூர்த்தி விழாவாகிய வைரவிழாவின்போது ஓர் மலர் (10-4-77) இவ்விழாச் சபையினரால் வெளியிடப்பெற்றது.

---

1 இந்நூலின் அநுபந்தத்தில் இடம்பெறுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயிலும் சமூகமும்

இந்துக்கோயில்கள் ஓர் சமூக நிறுவனங்களாக விளங்கின. கோயில்கள் ஒரு வழிபாட்டிடமாக மட்டுமில்லாது பல சமூகப்பணிகளை மேற்கொள்கின்ற நிறுவனமாகவும் விளங்குகின்றன. இப்படிப்பட்ட கோயில்களைப் பேணிப் பாதுகாப்பது, அவ்வவ்வூர்களில் வாழ்கின்ற மக்களின் தலையாய கடமையாகும். இந்த வகையிலே வண்ணார்பண்ணையிலே காலங்காலமாக வாழ்ந்துவரும் சமயச் சார்புகொண்ட மக்களால், இங்குள்ள ஆலயங்கள் பேணப்படுகின்றன.

இவ்வூரின் மத்தியிலே அமைந்திருக்கும் ஐயனார் கோயிலானது சகல மக்களின் வாழ்வுக்கும் உயிர்நாடியாக விளங்கிவருகின்றது. ஆன்மீக வாழ்வுக்கு மட்டுமன்றிச் சகலவித கலைவளர்ச்சிக்கும், கூட்டு வாழ்வு போன்ற சமுதாய விருத்திக்கும் இக்கோயிலே நிலைக்களனாக விளங்கிவருகின்றது. ஊரில் எழும் பலவிதமான பிணக்குகளைத் தீர்க்கவும் கோயில்கள் பயன்பட்டன. ஊரிலுள்ள தெய்வ சந்நிதியிலே கற்பூரத்தின்மேலே கையை வைத்துச் சத்தியம் செய்வதன்மூலம் பல வழக்குகள் தீர்க்கப்பட்டன. இதனால் இக்கிராமப்புறத் தெய்வசந்நிதிகள் மகிமை பெற்றன.

ஐயனார் கோயில் புனருத்தாரணம் செய்யும்பணியில் ஈடுபட்டவர்கள் பலர். இவ்வூரிலே வாழ்கின்ற கோயிற் பூசகரும் அவரது குடும்பத்தினரும், பெரியோர்களும், ஐயனார் கோயிலடிச் சனசமூகநிலையத்து இளைஞர்களுமேயாம். தற்பொழுது கோயிலின் பூசகராக கடமையாற்றிவருகின்ற திரு. செல்லப்பா அப்பாத்துரை (அப்புத்துரை) அவர்கள் தம்மாலான முயற்சியினை மேற்கொண்டு, இவ்வாலயத்தினைப் புதுப்பொலிவுடன் திகழவைத்தார். அத்தோடு பூசகரது குடும்பத்தினரும் கோயிலின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வருகின்றனர்.

ஐயனார் கோயிலடியில் தெய்வீக கைங்கரியத்தையே நோக்கமாகத் திருப்பணிச்சபை ஒன்று இயங்கிவருகின்றது. இத் திருப்பணிச் சபையானது ஓய்வுபெற்ற முன்னாள் நீதியரசர் கி. வை. நவரத்தினம் அவர்களைத் தலைமையாகக் கொண்டது. நீதியரசர் அவர்கள் தாம் உத்தியோகத்திலிருந்த காலம்தொட்டும், பதவியிலிருந்து ஓய்வுபெற்றும் இப்படியான தொண்டில் ஈடுபட்டு வருகின்றார். இவரின் குடும்பத்தினருமே கோயிற் தொண்டுக்கென்றே தங்களை அர்ப்பணித்துச்சேவையாற்றுகின்றார்கள்.

இவ்வூரிலே வாழ்கின்ற இளைஞர்களின் தொண்டு அளப்பரியது. இவர்கள் தங்களுடைய உடல், பொருள், ஆவி அத்தனையுமே கோயிற்



பணிக்கென்று அர்ப்பணித்து, இத்தகைய நல்ல கைங்கரியத்தினை முழுமன விருப்புடனே செய்துவருகின்றார்கள். இவ்விளைஞர்களின் முயற்சியினாலே எமது ஊரிலுள்ள ஐயனார் கோயிலும், காளிகோயிலும், பிள்ளையார் கோயிலும் புனருத்தாரணம் செய்யப்பெற்றன. ஐயனார் கோயிலடியிலுள்ள கோயில்கள் உருவிலும் திருவிலும் அருளிலும் பொலிந்து புகழ்பெற்ற கோயிலாக அமைய, இங்கு வாழ்கின்ற இளைஞர்களின்அயரா உழைப்பும் விடா முயற்சியுமே காரணமாகும். இவ்விளைஞர்கள் திருநாவுக்கரச சுவாமிகள் காட்டிய வழியில், ''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பதை உணர்ந்து, சிரமதானம் மூலம் ஆலயப்பணிகளைச் செய்துவருகின்றனர்.

ஐயனார் கோயிற் திருப்பணியினை மேற்கொள்வதற்குப் பலரும் பலவகையிலும் உதவியுள்ளார்கள். இவர்கள் கோயிற் திருப்பணிக்கென பணமாயும் பொருளாயும் உதவிசெய்துள்ளார்கள். இவற்றினை நல்கியவர்கள் இங்கு வாழ்கின்றவர்களேயாகும். இவர்கள் மேன்மேலும் இந்தவகையான தர்மப்பணிகளில் ஈடுபடுவார்கள் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

ஐயனார் கோயிற் திருப்பணிக்காக உழைத்தவர்களுள் முக்கியமாக குறிப்பிடவேண்டியவர்கள் மில்க்வைற் தொழிலதிபர் சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசாவும் இவரின் தமையனார் புத்திரனான திரு. இ. தவகோபால் அவர்களுமே ஆவர். இவர்கள் இந்து உலகுக்கு தம்மாலான பணியினை இற்றைவரையும் செய்துகொண்டு வருகிறார்கள். இவர்கள் இந்து உலக மக்கள் எத்தகைய சமய சமூகப்பணிகளை மேற்கொண்டாலும், அவர்களுக்கு பலவகையாலும் உதவிபுரிந்தும் ஊக்குவித்தும் வருகின்றார்கள்.

இன்னும் எத்தனையோ அன்பர்கள் ஆலய வளர்ச்சிக்காக பாடுபட்டு உழைத்துவருகின்றார்கள். இவர்களின் விடாமுயற்சியே இவ்வாலயம் சிறப்புற்று விளங்குவதற்கு காரணமாகும்.

ஐயனாரின் திருவருள் எங்கும் பொலிந்து விளங்குவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபந்தம் 1

## JAFFNA DIVISION LIST OF TEMPLE P - 12
## 1892

# AYANAR KOVIL.

## No. 45

Standing on the land called Chenkat Thidal. In 1770 by late Kopala Chettiar Vaithilinga Chettiar with stones and bucks tiles and thatched.

Managers: Ponnusamy Chettiar
Kannappa Chettiar
Somasundara Chettiar
Suppiah Chettiar and others.

No Festivals. Poosai once a day.

# ஐயனர் கோவில்

இல. 45

செங்கற்திடல் என்ற காணியில் அமைந்துள்ளது. கோபாலச் செட்டியார் வைத்திலிங்கச் செட்டியார் என்பவரால் 1770ஆம் ஆண்டிலே கற்களால் கட்டப்பட்டு கூரை ஓடுகளால் வேயப்பெற்றது;

மனேச்சர்: பொன்னுசாமி செட்டியார்
கண்ணப்ப செட்டியார்
எண்போரும்
சோமசுந்தரச் செட்டியாரும்
சுப்பையாச் செட்டியாரும் பிறரும்.

உற்சவங்கள் நடைபெறவில்லை; ஒருநேரப்பூசை



கோயிற் பிரதமகுரு
சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளைக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபந்தம் 2

வைரவிழாக்கொள்ளும் முக்கால் நூற்றுண்டு (75) ஆண்டுகளேக் கடந்த ஈழவளநாடு கீரிமலே ஸ்ரீ இரேணுகாச்சிரமம் முதுபெரும் மகாகுரு வீரசைவக் குருமகா சந்நிதானம் யாழ் வண்ணைநகர் ஐயனுர் கோயிலடி வாசரும் கீரி மலே ஸ்ரீ இரேணுகாச்சிரம ஸ்தாபகரும், கைலாச தேசிகர் எனப் புனித தீக்ஷா நாமத்தை அணேத்த

# சிவஸ்ரீ ஐயம்பிள்ளேக் குருக்கள் அவர்களின் வாழ்க்கை வரலாறு

*யாழ் . வண்ணேநகர், ஐயனுர் கோயிலடி ஆகமப் பிரவீன*

*பிரதமகுரு, சமாதான நீதிபதி*

**பிரம்மஸ்ரீ பி. பா. பஞ்சாட்சரக் குருக்கள்**

எழுபத்தைந்து ஆண்டுகள், நிறைபூர்த்தியில் வைரப் பெருவிழா வைக்கொள்ளும் பண்புடையார், கைலாய தேசிகர் எனப் புனித தீக்ஷா நாமத்தைத் தன்னகத்தே கொண்ட ஈழத்தின் வீரசைவக்குரு மகாசந் நிதியாம் சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளேக் குருக்களவர்களுக்கு முக்கால் நூற் றுண்டு பூர்த்தி தின வைரவிழாவைத் தாங்கிவரும் மலர்ப்பொய்கையி லுள்ள மலர்களுடன் என் மனமார்ந்த மலருரையொன்றினேயும் மல ரச்செய்ய முன்வந்துள்ளேன். ஏன்? நானும் எனது மூதாதையோர் களும் அவரும், அவர் மூதாதையோர்களும் ஒரூர் ஓரிடத்தில் பிறந்து வளர்ந்து வந்தவர்களினுலன்றே.

யாழ்ப்பாணக் கஸ்பாவில் வண்ணேநகர் ஐயனுர் கோயிலடியில் குருக்கள்மடம் என்னும் பழம்பெருமகத்தில் வீரசைவ மரபுவழியினரில் தோன்றிய குருதிலகமாய் விளங்குபவர் ஸ்ரீ ஐயம்பிள்ளேக் குருக்கள் அவர்கள்.

"எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிதந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போது ஆர்வமிகு அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதற்சைவ ராம்முனிவர்".

என்று சேக்கிழார் பெருமானுல் புகழ்ந்து போற்றப்பெறும் பெரு மையினேயுடைய வீரசைவப் பெருமக்களின் பரம்பரையில் சிறந்தும், சிறந்த காயாரோகணக் குருக்கள்முதல் ஏழு எட்டுத் தலேமுறை (பழம்பெரும் தோம்புறுதி வம்சவழி) மரபில் தோன்றிய சிதம்பரப்பிள் ளேக் குருக்களின் அருந்தவப் புதல்வராவர். இவர் ஜனனமாகி இரண் டாம் வயதில் தனயனின் சிறப்பினேக் கண்குளிரக் காணுமலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதால் கேளாமலும் சிவன் திருவடியை அடைந்தார். அதிலிருந்து அவரின் மாமனார் வண்ணார்பண்ணை நகரில் ஒரு தமிழ்ப் பாடசாலையை அமைத்துக் கல்வி போதித்து வந்தவருமான சிதம்பரப்பிள்ளைக் குருக்களாவர். அன்னாரின் மேற்பார்வையில் கங்குல் பகலாக வளர்ந்து கல்வி பயின்றுவந்தார்.

சிறு பராயத்திலிருந்தே அவரின் குணம், அமைதி, இன்சொல், அடக்கம், தோற்றம், பொறுமை, உயர்பண்பு முதலிய அம்சங்கள் யாவும் அன்னாரின் பரம்பரைக் குருகுலமரபின் சிறப்பினை எடுத்தியம்புகின்றன.

சட்டம்பியார் பாடசாலையில் பிரபலம் வாய்ந்த அந்தணர்குலப் பிள்ளைகளும், பெருவேளாளகுலப் பிள்ளைகளும் கல்விகற்றுவந்தனர். அப்போது இவர் தமது ஆரம்பத் தமிழ்க் கல்வியை இப்பாடசாலையில் கற்றுவந்தார். பின்பு உயர்கல்விக்காக ஆறுமுகநாவலர் பாடசாலையிலும் விசேட புலமை நிமித்தம் சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடமும் கைலாயபிள்ளையிடமும் கல்விகற்றுத் தமிழ்க் கல்வித்துறையில் புலமையடைந்து சிறந்து விளங்கினார்.

வண்ணை ஐயனார் கோயிலடியிலுள்ள பிரபல அந்தணரும், கல்வி கேள்விகளிலும், தனு, கரண, புவன போகங்களிலும் சிறந்து விளங்கிய நைஷ்டிகரும் ஆன்மார்த்தா சிவபூஜா துரந்தரருமாகிய பிரம்மஸ்ரீ மு. பிச்சுக்குருக்களிடமும் அவரின் ஜேஷ்ட குமாரனும் பல மூர்த்திகளுக்குத் தியானங்களையும் அஷ்டோத்தர சத (108) அர்ச்சனை நாமாவளிகளையும் சேர்த்து தியானார்ச்சனா கதம்பம் என்ற நூலை முதன்முதலில் சென்னையில் வெளியிட்டவரும் தர்க்கம், வியாகரணம், புராணபயன் ஆகியவைகளில் வித்துவத்தன்மை உடையவருமாகிய பிரம்மஸ்ரீ குமாரசாமிக் குருக்களிடம் கிரந்தம், நாகரம் ஆகிய இருமொழிகளைக் கற்றும், சுன்னாகம் சமஸ்கிருத பாடசாலை சிதம்பர சாஸ்திரிகளிடமும் பயின்று புலமையடைந்து விளங்கினார். பின் ஆகமம், வைதீகம், லௌகீகம் ஆகிய தத்துவங்களையும் கிரியைமுறைகளையும் எனது பாட்டனார், பெரியதந்தை ஆகியோரிடமும் கிரியாசாரமாகக் கற்றுணர்ந்து ஆன்மார்த்தம், பரமார்த்தமாகிய பூஜாகிரமம், கிரியாகிரமம், வேள்வி (யாகம்) முதலியவைகளையும் ஆற்றும் புலமையுடையவரானார். கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவ மஹோற்சவங்கள், பிராயச்சித்தம் வரை தீக்ஷாவகையிலும், மக்களது ஆன்ம ஈடேற்றத்திற்கு வேண்டிய இருவகைச் சிறப்புக் கிரியைகளிலும் சிறப்புற்றவருமன்றி, வீரசைவ நித்திய ஆன்மார்த்த பூசையிலும் முப்போதும் தவறாது ஒழுகும் நைஷ்டிகருமாவர்.



இவர் வீரசைவ தத்துவத்தை அறிந்தும், தெரிந்து தெளிந்து கொள்வதற்காகப் பல குருமார்களையும் வித்துவப் பிரவீணர்களையும் தேடியும் நாடியும், வீரசைவநூல்கள் எங்கெங்குளதோ ஆங்காங்கு சென்றுவரும் சமயம் மட்டுவில் பண்டிதர் மகாலிங்கசிவம் அவர்களையும், கலைப்புலவர் அவர்களையும் சந்தித்து அளவளாவி ஆராய்ந்து அவர்களிடமுள்ள நூல்களையும், அவர்களால் இந்தியாவில் வீரசைவத்தின் அருமை பெருமைகளையும், குருபீடங்களையும், பீடாதிபதிகளையும், அவர்களின் முகவரிகளையும் அவர்கள் போதித்த உபதேச வாக்கியங்களையும் அறிந்து அவர்களுடன் தொடர்புகொண்டு வீரசைவ நெறிமுறையைக் கசடறக் கற்று விளங்குகின்றார். இவர் எமக்கு மிக வேண்டியவர். பல கலைநுட்பங்களைப் பரிமாறிக்கொள்வதைக் கூறும்லிருக்க முடியவில்லை. இவ்வாறாக மனதில் வீரசைவ நெறிகளையும், தத்துவங்களையும், பெருமைகளையும், கிரியாமுறைகளையும் அறிந்தும் தெரிந்தும் கொள்வதற்காகப் பெரும் ஆவலுற்றிருந்தகாலை விவாகம் நடந்த பின்னர் சட்டம்பியார் என்ற பெருமைமிக்க மாமனார் சிதம்பரப் பிள்ளைக் குருக்களவர்களும் பூவுலக வாழ்க்கையை முடித்துக்கொண்டார்.

அவரின் சிவதருமோத்திரக் கிரியைகளையும் மோட்சதீபக் கிரியைகளையும் முறைதவறாது தானே செய்யவேண்டிக் குருப்பட்டம் பெறுவதற்காக இந்தியா செல்வாராயினார்.

இந்தியாவில் வீரசைவ வீரசிம்மாசனாதிபதியாகிய சாரங்க தேசிகேந்திர மகாலிங்க சிவாச்சாரியாரவர்களிடம் வீரசைவக் கிரியா நெறிகளையும், ஒழுக்கங்களையும், அனுஷ்டானங்கள், பழக்க வழக்கங்களையும், மோட்சதீபக் கிரியைகளையும், தத்துவங்களையும் கற்றும் கேட்டும், பார்த்தும் தெளிந்து சிறிதும் ஐயம்பிழையாத ஐயம்பிள்ளைக் குருக்களாக குருப்பட்டம் பெற்று விளங்கினார். ஈழந்திரும்பி மாமனாரின் ஆன்ம ஈடேற்றக் கிரியைகளைச் செவ்வனே செய்து வீரசைவநெறிமுறை தவறாது மனைமக்கட் பெறுபேறுகளுடன் விளங்குவதுமன்றித் தமிழ் கிரந்தம், தேவநாகரம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுணர்ந்த பேரறிஞருமானவர்.

ஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்களும் அவர்தம் சுற்றத்துடன் சக அபிமானியுமாகிய நானும் இந்திய க்ஷேத்திரங்களைத் தரிசிக்கச் சென்ற சமயம் இராமேஸ்வரம் சென்றோம். இங்கு எல்லாவகைக் குருசந்நிதானங்கள், பீடாதிபதிகள், ஆச்சாரிய சுவாமிகளுக்கும் மடங்கள் உள்ளன. அதில் வீரசைவ லிங்காயதர் மடமும், இரேணுகாசாரியார் மடமும் சிறப்புற்று விளங்குகின்றன. அம்மடங்கள் மிக வசதிபடைத்த மடங்களாக மிளிர்கின்றன. அங்குள்ள மடாதிபதிகள் ஆற்றல்மிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரசைவநெறியின் பழங்களாக விளங்குகின்றனர். அங்கு சென்ற பொழுது நம் குருக்களுக்குநடந்த கௌரவமும், சிறப்பும், மரியாதையும் இன்றும் மறக்கமுடியாமலிருக்கிறது. இப்புனிதமான வீரசைவ மடங்களையும் மடாதிபதிகளையும் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றேன். மைசூர், பெங்களூர், கர்நூல், அதோனி, தெலுங்கானா ஆகிய ஆந்திரப் பிரதேசம் முழுவதும் வீர சைவமாகவே விளங்குகின்றன.

கர்நூல், அதோனி ஓம்நகரில் பல அற்புதங்களைச் செய்தும் ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடின்றி அண்டிய அடியவர்களுக்கு இன்னல்களைப் போக்கி மனச்சாந்தியைக் கொடுத்தும் உலகமக்கள் உய்யும்பொருட்டு அருள்வாக்குகளை வழங்கிக் கொண்டுமிருக்கும் ஸ்ரீ பகவான் நீலகண்ட தாத்தா அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் அவரின் குருதேவரும் ஓர் கடும் வீரசைவ மரபினராவர். நான் இவரின் ஆத்ம பிரதம அபிமான சிஷ்யனாவேன் என்பதை உணர்த்தாமலிருக்க முடியவில்லை.

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய குருக்களவர்களுக்கு வண்ணார்பண்ணை மக்களாலும் மற்றும்பல ஊர்களைச் சேர்ந்த சிஷ்யப் பெருமக்களாலும் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பருத்தித்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு, தெல்லிப்பழை, மயிலிட்டி. காங்கேசன்துறை, அளவெட்டி, மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, கீரிமலை, சண்டிருப்பாய், மிருசுவில், புலோலி, உரும்பராய், யாழ்ப்பாணம், பூநகரி, வவுனியா ஆகிய ஊர்களிலுள்ள பெருமக்களின் பரம்பரைக் குருவாகவும் விளங்குகின்றார். இவ்வூர்களிலுள்ள குருமார்களும் கீரிமலை ஸ்ரீ இரேணுகாச்சிரம குருமகா சந்நிதானத்தை தங்கள் குருபீடமாகக் கொண்டுள்ளனர். ஆகம, புராண, இதிகாசங்கள், உபநிடதங்களிலுள்ள நுட்பக் கருத்துக்களையும், உண்மை முறைகளையும் உண்மையான முறையில் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதிலும் எடுத்துக்காட்டுவதிலும் நுண்ணறிவுள்ளவராவர். ஈழத்தில் புகழ்பெற்ற முருகஸ்தலமான நல்லூர்க் கந்தசாமி கோயிலின் தேர்த்திருவிழாவுக்கு முதல்நாளும் மறுநாளும் இவரையும் ஏனைய வீரசைவக் குருமார்களையும் அழைத்துப் பட்டுக் காளாஞ்சி முதலிய கௌரவங்களை அறங்காவலர் வழங்கிவருகின்றார்கள். இக்குருக்கள்மார்களில் இவரே முதல்வராகப் போற்றப்பட்டுள்ளார்;

முறைதவறியவர்கள் எவ்வகையினராயினும் அவர்களுக்குக் கண்டனம் தெரிவித்து அவர்களின் பிழைகளைக் கண்டித்து அவர்களின் செயலுக்கு மறுப்புத் தெரிவித்து, உண்மை வழிமுறைகளை எழுதுவதிலும் வெற்றிகண்டு பெரும்பெயரை உலகமறியத் தட்டிக்கொண்டவர்.



இப்படியான அருமை பெருமைகளை உடையவருக்கு என் ஊர்ப் பிறந்த பெருந்தகைக்கு ஆசியுரை கூறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். அளப்பரிய மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்படிப் பெருமைக்குரியவரும் மக்கள்வகைப் பெருமக்களினதும் எனது அபிமானத்துக்குமுரிய உயர் சிவஸ்ரீ குருக்களவர்கள் இன்னும் கால் தாண்டி நூற்றாண்டுகளுக்கு மேலாகச் சகல சிறப்புக்களுடனும் வாழ்ந்து சதசம்வற்சரம் தீர்க்கமாயும் தீர்க்காயுளுடன் வீரசைவத்திற்கும் வீரசைவ அபிமானிகளுக்கும் வீரசைவப் பரம்பரையினருக்கும் வழிகாட்டும் குருமகா சந்நிதானமாய் விளங்கி வாழ எல்லாம் வல்ல எம்பெருமானார் இரேணுகாசாரியார் அவர்களையும் பிறந்த இடமாகிய ஐயனார் கோயிலடியில் ஆலயம்கொண்டு பழம்பெரும் பெருமையுடனும் குருக்கள் அவர்களது மூதாதையோர்களினது நித்திய பூஜா வழிபாட்டு மூர்த்தியாகிய ஐயனாரையும் (பூரண புட்கலா சமேத ஸ்ரீ அரிகரபுத்திரன்) ஏத்தி இறைஞ்சி இறைஞ்சும் இவ்வாசியுரையை வாழ்க! வாழ்க! என்று திரிகரண சுத்தியுடன் வாழ்த்தி ஆசிவழங்கிப் பெருமையடைகின்றேன் வாழ்க! வாழ்க ! குருமகா சந்நிதானம். பரவுக பாரெங்கும் வீரசைவம். சுபம்பவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபந்தம் 3

# ஐயப்பன் பாட்டுகள்

காப்பு

**அந்தணர் முனிவர் சூழ அற்புத சபையைப் போற்றி**
**மந்திரம் கையிலேந்தும் வாழ்குளத் தூரன் மீதில்**
**சிந்தையி லுதித்த தெல்லாம் செப்புமுன் கவி விளங்க**
**ஸ்கந்தனும் குருவும் வாணி கஜமுகன் காப்பதாமே.**

**சரணம் இதுவன்றி ஆவதில்லை ஐயன்**
**தருணபதம் "சாமீ சரணம்" — சரணம் எனத்**
**தாங்கும் ஒலிஎங்கும் தழைக்கவருந் தொண்டரைக்**
**காக்கும் ஐயப்பன் கழல்.**

ராகம்:-செஞ்சுருட்டி — தாளம்: ஆதி

1. குளத்தூர் பாலா குணக்கொழுந்தே எங்கள்
   குற்றங்கள் பொறுத்தருள்வாய்
   ஆரியங் காவினில் ஆனந்த ரூபா
   அபயம் அபயம் ஐயப்பா.

2. எருமே லியில்வளர் ஏழை பங்காளா
   எங்களைக் காத்தருள்வாய்
   ஐந்து மலைக் கதிபா ஐங்கர சோதரா
   ஐயப்பனே சரணம்.

3. கலியுக வரதா கலிமல நாசனு
   கருணகர தேவா
   சத்யபரி பாலகா சத்குண சீலா
   சபரி மாமலை வாசா

4. வீரமணி கண்டா விஜய குமாரா
   விஷ்ணு மோகினி பாலா
   சாந்த தயாபர சத்குரு நாதா
   சரணம் சரணம் ஐயப்பா.

குறம் மெட்டு

சபரிமலை தன்னில் வாழும் — எங்கள் மணிகண்டன்
சகலவேத சாஸ்திரியன் ... ...
பக்தர் கவலை நீக்கிடுவார் ... ...
முத்தியளித்து ஆதரிப்பார் ... ...
வில்லணிந்த வீரசிவர் ... ...
குளத்தூரில் குடிகொள்ளும் ... ...
லோகமெங்கும் புகழ்பெற்றார் ... ...
நித்யப்ரும்ம சாரியான ... ...



**வேல்முருகன் தம்பியன்றோ — எங்கள் மணிகண்டன்**
**சிங்கம் தன்னில் ஏறிவரும் ... ...**
**ஆரியங் காவு ஐயனிவர் ... ...**
**ஞானவழி காட்டிடுவார் ... ...**
**ஹரிஹரனின் மைந்தனுன ... ...**
**அன்பர்களைக் காக்கவந்தார் ... ...**
**பந்தளத்தில் வந்துதித்தார் ... ...**
**பரப்ரும்ம மூர்த்தியான ... ...**
**மஹிஷியைச் சங்கரித்தார் ... ...**
**மோக்ஷ வழி காட்டிடுவார் ... ...**
**பேரும் புகழும் தந்திடுவார் ... ...**
**நித்ய மங்கள மூர்த்தியான — எங்கள் மணிகண்டன்**

## தினசரி சொல்லக்கூடிய சரணங்கள்

ஹரிஹர சுதனே — சரணம் ஐயப்பா!
மோஹினி பாலனே ...
வன்புலி வாகனனே ...
சபரிமலை வாசனே ...
இருமுடி ப்ரியனே ...
எங்கள் குல தெய்வமே ...
நெய் அபிஷேக ப்ரியனே ...
சேவிப்பவர்க்கு ஆனந்தனே ...
கண்கண்ட தெய்வமே ...
இஷ்டவரம் தருபவனே ...
சத்குரு நாதனே ...
கன்னிமலைக்காரர்களைக் காப்பவனே ...
கர்ப்பூர ப்ரியனே ...
தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபனே ...
காந்தமலை ஜோதியே ...
பம்பா வாசனே ...
அன்னதான ப்ரபுவே ...
கன்னிமூலை கணபதியே ...
மாளிகைப் புரத்தம்மா தேவிமஞ்ச மாதாவே ...
ஆரியங்காவி லையனே ...
எருமேலி தர்மசாஸ்தாவே ...
ஜாதிபேத மில்லாதவனே ...
பராசக்தி பாலனே ...
குளத்தூரில் குடிகொள்ளும் பாலனே சரணம் ஐயப்பா!

***சகலகுற்றங்களையும் மன்னித்துக் காத்தருளவேண்டும். சத்தியமான பொன்னு பதினெட்டாம் படிமேல் வாழும் ஸ்ரீ ஹரஹரசுதன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா!***

***சுவாமியே சரணம் ஐயப்பா!***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைநூற் பட்டியல்கள்

1. இருபத்தைந்தாவது ஆண்டு மணிவாசகர் விழா மலர்
   (காரைநகர் மணிவாசகர் சபை 1979)
2. சுருவில் ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார்கோயில் கும்பாபிஷேக மலர்
   (ஆலயத் திருப்பணிச் சபை 1975)
3. வீரசைவ மகாகுரு சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள்
   (75ஆம் ஆண்டு பூர்த்தி வைரவிழா மலர் 1977)
4. யாழ்ப்பாணச் சரித்திரம்:
   ஆசிரியர் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள்
5. யாழ்ப்பாணத்துக் கச்சேரியிலுள்ள சைவக் கோயில்கள், கிறிஸ்தவக் கோயில்கள் (பற்றிய பதிவு இடாப்புப் புத்தகம் 1892)
6. சைவத் திருக்கோயிற் கிரியை நெறி
   பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்
   (இந்து கலாபிவிருத்திச் சங்கம், கொழும்பு 1965)
7. ஸ்ரீ ஐயப்பன் தத்துவங்கள்
   திரு. வி. என். சிதம்பரம் செட்டியார்
   (வானதி பதிப்பகம்)
8. ஊர்ப்பெயர் உட்பொருள் விளக்கம்
   ஆசிரியர் மல்லை நமச்சிவாயப் புலவர்
   வெளியிட்டவர் திரு. நம சிவப்பிரகாசம்
9. சுவாமியே சரணம் ஐயப்பா
   ஆசிரியர் ஸ்ரீ வித்தியா ஞானபாஸ்கர
   "நஜன்"
   (எஸ். நடராஜன்)



உ

## 1985ம் ஆண்டு
## ஐயனார் கோயில் திருப்பணிச் சபைக்குப் பணம், பொருட்கள் வழங்கியோர் விபரம்:

### பணம்

| பெயர் | ரூபா | சதம் |
|---|---|---|
| ஸ்ரீ விசுவேசப் பிள்ளையார் கோவில் | 2500 | 00 |
| திரு. S. கணேசரத்தினம் | 1575 | 00 |
| திரு. N. சோமசுந்தரம் | 1500 | 00 |
| திரு. வே. கந்தசாமிப்பத்தர் | 1250 | 00 |
| திரு. R. தவகோபால் | 1000 | 00 |
| திரு. M. தாமோதரன் | 1000 | 00 |
| திரு. S. சுந்தரலிங்கம் | 1000 | 00 |
| திரு. S. இராகவன் | 1000 | 00 |
| திருமதி R இராஜிகுமார் | 1000 | 00 |
| டாக்டர் கனகசபை | 1000 | 00 |
| டாக்டர் P. சிவநாதன் | 700 | 00 |
| திருமதி R. V. கந்தையா | 600 | 00 |
| திருமதி மகேஸ் பாலசிங்கம் | 500 | 00 |
| திரு. V. ஆறுமுகம் | 500 | 00 |
| திருமதி T. செல்வரத்தினம் | 500 | 00 |
| டாக்டர் நிர்மலா பரமானந்தம் | 500 | 00 |
| திரு. அப்புத்துரை சிவகுமாரன் | 500 | 00 |
| திரு. N. மகேசன் | 500 | 00 |
| திரு. P. சோமசுந்தரம் செட்டியார் | 500 | 00 |
| திரு. R. தவேந்திரன் | 500 | 00 |
| திரு. S. நாகேந்திரா | 500 | 00 |
| திரு. S. சோமசுந்தரம் | 500 | 00 |
| திருமதி டாக்டர் சிவயோகநாதன் | 500 | 00 |
| திருமதி S. இராமச்சந்திரன் | 350 | 00 |
| திருமதி M. மகாலிங்கம் | 300 | 00 |
| திருமதி S. சஞ்சீவலிங்கம் | 300 | 00 |
| திருமதி P. பரராசசிங்கம் | 300 | 00 |
| திருமதி A. விஞசித்தம்பி | 250 | 00 |
| திருமதி இளையதம்பி | 250 | 00 |
| டாக்டர் V. இராஜநாதன் | 250 | 00 |
| திரு. J. விசுவநாதன் | 250 | 00 |
| திரு. S. நாகராசா (புடைவைக் கடை) | 227 | 00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | ரூபா | சதம் |
|---|---|---|
| திரு. சி. அப்புத்துரை | 200 | 00 |
| திரு. S. விவேகானந்தன் | 200 | 00 |
| திரு. P. விவேகானந்தன் | 200 | 00 |
| திருமதி பத்மாவதி சோமசுந்தரம் | 200 | 00 |
| திருமதி லீலா சுப்பிரமணியம் | 200 | 00 |
| திருமதி பவளம் தம்பித்துரை | 200 | 00 |
| திருமதி தங்கம்மா சோமசுந்தரம் | 200 | 00 |
| திருமதி சந்திரா பரமேஸ்வரன் | 150 | 00 |
| திரு. N. நாகராசா | 101 | 00 |
| திரு. T. நடராசா | 100 | 00 |
| திரு. T. இரவீந்திரன் | 100 | 00 |
| திரு. S. கிருஷ்ணபிள்ளை | 100 | 00 |
| திரு. D. சிவபாலன் | 100 | 00 |
| திரு. K. துரையப்பா | 100 | 00 |
| திரு. S. பரமலிங்கம் | 100 | 00 |
| திரு. K. பொன்னுச்சாமி | 100 | 00 |
| திரு. C. நடராசா | 100 | 00 |
| திரு. K. இராமநாதன் | 100 | 00 |
| திரு. V. கந்தசாமி | 100 | 00 |
| திரு. T. செல்லத்துரை | 100 | 00 |
| திரு. S. தில்லைநாதன் | 100 | 00 |
| திரு. ந. கிரிதரன் | 100 | 00 |
| திரு. ம. தயாபரன் | 100 | 00 |
| திருமதி K. சிவராமலிங்கம் பிள்ளை | 100 | 00 |
| திருமதி சிவலிங்கம் | 100 | 00 |
| திருமதி S. இராசையா | 100 | 00 |
| திருமதி V. இராசலட்சுமி | 100 | 00 |
| திருமதி ஐயாத்துரை | 100 | 00 |
| திருமதி R. அருளானந்தன் | 100 | 00 |
| திருமதி A. சிறீதரன் | 100 | 00 |
| திருமதி T. ஜெயராசா | 100 | 00 |
| திருமதி R. ஜெகுமையா | 100 | 00 |
| திருமதி P. செல்வராசா | 50 | 00 |
| திருமதி P. செல்லத்துரை | 50 | 00 |
| திரு. C. கனகசபாபதி | 50 | 00 |
| திரு. T. சோமசுந்தரம் | 50 | 00 |
| திரு. G. அரிச்சந்திரன் | 50 | 00 |
| டாக்டர் M. பாலசிங்கம் | 20 | 00 |
| கோவில் தகரம், மரம் விற்ற பணம் | 4455 | 00 |
| மொத்தம் | 31,278 | 00 |



## பொருட்கள் உதவியோர்:-

| அண்ணளவான தொகை | ரூ. | ச. |
|---|---|---|
| திரு. K. கனகராசா J. P. (மில்க்வைற் தொழிலகம்) (100 ஓடுகள், 32 முகட்டோடு) | 5000 | 00 |
| திரு. இ. தவகோபால் (350 ஓடுகள்) | | |
| டாக்டர் J. சிதம்பரநாதன் (கதவு, நிலை, அரிகற்கள்) | 2000 | 00 |
| திரு. T. சோமசுந்தரம் – மர அரிவு நிலையம் (பனைமரம், தீராந்தி) | 3500 | 00 |
| திரு. V. கந்தசாமிப் பத்தர் (அரிகற்களும் காட்டுக் கற்களும்) | 300 | 00 |
| திரு. அருச்சுனன் (2 ரைக்ரர் மணல்) | 350 | 00 |
| திரு. முனிஐயா இராசகோபால் (கும்பாபிஷேக விளம்பரம்) | 225 | 00 |
| திரு. S. நாகேந்திரா (மாபிள் கற்கள், ரேப்பன் தைலம்) | 200 | 00 |
| திரு. S. சிவநாதன் (ஓர் பெரிய மின்குமிழ்) | 300 | 00 |
| திரு. ச. கந்தையா ஆசாரி (கூரைவேலை நன்கொடை) | 2000 | 00 |
| திரு. து. சாந்திகுமார் (அபிஷேகப் பொருட்கள்) | 200 | 00 |
| திரு. செ. அப்புத்துரை (மூலஸ்தான திருவாசி) | 1250 | 00 |
| திரு. அ. கிருபானந்தன் (மூலஸ்தான பீட அங்கி) | 600 | 00 |

1985ம் ஆண்டு மகாகும்பாபிஷேகத்தன்று அன்னதானம் வழங்கப் பணம், பொருட்கள் வழங்கியோர்

| பணம் | ரூ. | ச. |
|---|---|---|
| திரு. K. பரமலிங்கம் | 50 | 00 |
| திரு. R. கனகரத்தினம் | 50 | 00 |
| திரு. அருமைச்செல்வம் | 25 | 00 |
| திருமதி தி. நாகேஸ்வரி | 20 | 00 |
| திரு. கி. தேவராசா | 10 | 00 |
| திரு. தெ. புஸ்பராஜநாயகம் | 10 | 00 |
| திரு. சு. கதிரவேற்பிள்ளை | 5 | 00 |
| திரு. பெ. செல்வநாயகம் | 5 | 00 |
| மொத்தம் | 175 | 00 |

பொருட்கள்

| | |
|---|---|
| டாக்டர் சண்முகநாதன் | ... 40 படி அரிசி, 15 தேங்காய் |
| குகானந்தபவான் (தேனீர்க் கடை) | ... 10 படி அரிசி |
| இராமஜெயம் ஸ்ரோர்ஸ் (பலசரக்குக் கடை) | ... மரக்கறி வகைகள் |
| லக்கி ரேட் சென்ரர் | ... 3 படி அரிசி, 5 தேங்காய் |
| திரு. K. இராசகுலசிங்கம் | ... 1 வாழைக்குலை |
| திரு. க. திருச்சிற்றம்பலம் | ... 5 கிலோ அரிசி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திரு. R. தம்பிமுத்து | ... 5 படி அரிசி, 10 தேங்காய் |
| திரு. இராசரத்தினம் | ... 20 தேங்காய் |
| திரு. S. தியாகலிங்கம் | ... 5 தேங்காய் |
| திரு. இராசசுந்தரம் (வைரமுத்து மாமா) | ... 4 கிலோ மைசூர் பருப்பு |
| திரு. வ. பொன்னுச்சாமி | ... 5 படி அரிசி |
| திரு. S. பஞ்சலிங்கம் (தேநீர்க்கடை) | ... 5 படி அரிசி |
| திருமதி J. சிதம்பரநாதன் | ... 50 தேங்காய் |

செலவுகள் - கட்டிடம்

| | | | |
|---|---|---|---|
| சீமேந்து | 8855 00 | வர்ணம்தீட்டும் பொரு. | 985 00 |
| கற்கள், மணல், கா.கல்லு | 3 925 00 | போல்நட், ஆணி, கடகம் | 390 00 |
| மேசன் கூலி | 87 60 00 | கந்தையாஆசாரி கூ.வேலை | 500 00 |
| முருகன் ஏனையோர் கூலி | 725 00 | மின்னிணைப்பு | 655 00 |
| சோமசுந்தரத்திடம் | | கேணி, கிணறு இறைக்க | 220 00 |
| கூரை மரங்கள் | 2000 00 | உதவியாட்களுக்கு | 1000 00 |
| லொறி, வண்டிக்கூலி | 620 00 | மொத்தம் | 28,635 00 |

அன்னதானம்

| | |
|---|---|
| மரக்கறி, இலைகள், கிழங்கு, தேங்காய் | 650 00 |
| சமையல் ஆள் கூலி | 75 00 |
| உதவிஆள் கூலி | 50 00 |
| படங்கு வாடகை | 50 00 |
| மொத்தம் | 825 00 |

பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

| | |
|---|---|
| மேளம் | 775 00 |
| ஐயர்மார்களின் தட்சணை | 1100 00 |
| தேநீர் உதவியாட்கள் | 150 00 |
| வேட்டி, சால்வை | 856 00 |
| அபிஷேகத் திரவியங்கள் | 520 00 |
| கிரியைப் பொருட்கள் | 1100 00 |
| ஒலிபெருக்கி | 260 00 |
| முன்பந்தல் (பகுதிச் செலவு) | 450 00 |
| பெற்றோல், கயிறு, தட்சணை | 150 00 |
| மொத்தம் | 5361 00 |

| ஐந்தொகை | வரவு | செலவு |
|---|---|---|
| கோயில் | 31278 00 | 28635 00 |
| கும்பாபிஷேகம் | — | 5361 00 |
| அன்னதானம் | 175 00 | 825 00 |
| திரு. சி. வை. நவரத்தினம் | 3368 00 | — |
| மொத்தம் | 34821 00 | 34821 00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org